
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

வைகாசி
மே — 1978



ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

விலை 70 காசு

ஓர் அறிவிப்பு

பேரன்புக்குரிய வாசகர்களுக்கு,

கடவுளின் கிருபையை முன்னிட்டு எழுதுவது. அன்பும் வணக்கங்களும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் கடந்த 57 ஆண்டுகளாகத் தமிழ் அன்பர்களுக்கு உயர்ந்த, ஆன்மிக, வேதாந்தக் கருத்துக்களை அளிக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது. வாசகர்களுக்குக் குறைந்த பணச் செலவில் இப் பத்திரிகையைக் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண மடம் எப்போதும் முயன்று வந்திருக்கிறது.

இதர பத்திரிகைகள் தங்களுடைய சந்தாவை உயர்த்தியபோதிலும் **ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்** நஷ்டமடைந்தாலும் பெருங்கஷ்டத்துடன் பொதுமக்களின் நலனை முன்னிட்டு ரூ. 7-க்கு மேல் உயர்த்தாமல் வந்துள்ளது. ஆனால், இப்போது நமது விஜயம் பத்திரிகைக்குப் பயன் படுத்தப்பட்டு வரும் காகிதம், பிளாக்குகள், அச்சுசெலவு போன்ற செலவுகளை முன்னிட்டுச் சந்தாவையும் தனிப்பிரதி விலையையும் ஒருசிறிது உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப் பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். வாசக அன்பர்கள் நிலைமையை உணர்ந்தும் இந்தச் சந்தா உயர்வை ஏற்றும் விஜயத்தின் பணி எப்போதும்போல் சிறந்து விளங்க உதவி புரியக் கோருகிறோம்.

இந்த அறிவிப்பு வெளிவரும் இப்போது முதல் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்பவர் களும் புதிய சந்தாதாரர்களும், ஆண்டுச் சந்தா ரூ. 8 என்று கணக்கிட்டு, சந்தாத் தொகையை அனுப்பி வைத்து விஜயத்தின் பணிக்குத் தொடர்ந்து ஒத்துழைக்கக் கோருகிறோம்.

புதிய சந்தா விவரம் - 1978 ஏப்ரல் முதல்

ஆண்டுச் சந்தா:—

இந்தியா	ரூ.	8-00
இலங்கை	ரூ.	10-00 (இந்திய நாணய மதிப்பில்)
யு.எஸ்.ஏ.	$	4-00
பிற நாடுகள்	£	2-00

ஆயுள் சந்தா:—

இந்தியா	ரூ.	100
யு.எஸ்.ஏ.	$	70
பிற நாடுகள்	£	25

ஜூன் 1978 முதல் தனிப்பிரதி இந்தியாவில் 85 காசு

சுவாமி சித்கனனந்தர்
பதிப்பாளர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58	மே 1978	இதழ்—5

பொருளடக்கம்

சந்தாதாரர்கள் கவனிக்க

1. சந்தா எண் 7001 முதல் 7689 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத்தொகை ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. அன்பர்கள் சந்தாவை உடனடியாகச் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.
2. ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால் மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு பத்திரிகை வேண்டாம் என்று கருதும்போது தாங்கள் டிபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். டிபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோவியங்கள் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை
— திருமூலர்

தொகுதி 58 | காளயுக்தி ஞு வைகாசி மீ | இதழ் 5



यं शैवाः समुपासते शिव इति ब्रह्मेति वेदान्तिनो
बौद्धा बुद्ध इति प्रमाणपटवः कर्तेति नैय्यायिकाः ।
अहन्नित्यथ जैनशासनरताः कर्मेति मीमांसकाः,
योऽयं नो विदधातु वांछितफलं त्रैलोक्यनाथो हरिः ॥

யம் சைவா: ஸமுபாஸதே சிவ இதி ப்ரஹ்மேதி வேதாந்திநோ
பௌத்தா புத்த இதி ப்ரமாணபடவ: கர்த்தேதி நையாயிகா: |
அர்ஹந்நித்யத ஜைநசாஸநரதா: கர்மேதி மீமாம்ஸகா:,
யோऽயம் நோ விததாது வாஞ்சிதபலம் த்ரைலோக்ய நாதோ ஹரி: ||

எவரைச் சிவன் என்று சைவர்களும், பிரம்மம் என்று வேதாந்திகளும், புத்தர் என்று பௌத்தர்களும், நியாய சாஸ்திரத்தில் நிபுணர்களான நையாயிகர்கள் கர்த்தா என்றும், ஜைனருடைய கட்டளையில் பிரியம் வைத்தவர்கள் அர்ஹர் என்றும், மீமாம்ஸகர்கள் கர்மம் என்றும் வழிபடுகிறார்களோ அந்த மூவுலக நாயகரான ஹரியானவர் நமக்கு விரும்பிய பயனை அளிக்கட்டும்.

வேதம் ஓதிய வேதியர்க் கோர் மழை
நீதி மன்னர் நெறியினுக்கு ஓர் மழை
மாது கற்புடை மங்கையர்க்கு ஓர் மழை
மாதம் மூன்று மழையெனப் பொழியுமே.

—விவேக சிந்தாமணி



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

பாமர மனிதன் தன் அறியாமையால் தன்னுடைய மதமே பெரிது என்று நினைத்து ஆரவாரம் செய்கிறான். உண்மைஞானம் உதித்தவுடன் எல்லாச் சமயப் பூசல்களும் ஒழிந்து விடுகின்றன.

கடவுள், உருவம் உடையவரும் உருவம் இல்லாதவரும் ஆவார். அதோடு 'உருவம், அருவம் ஆகிய இரண்டையும் கடந்தவருமாவார். அவர் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பதை அவரேதான் முற்றிலும் அறிவார்.

மனிதன் தயையில் கிறிஸ்தவனைப் போலவும், அனுஷ்டானங்களைத் தவறாமல் கடைப்பிடிப்பதில் இஸ்லாமியனைப் போலவும், உலகிலுள்ள எல்லா உயிர்களையும் நேசித்து அன்பு பாராட்டும் விஷயத்தில் இந்துவாகவும் இருக்கட்டும்.

ஒவ்வொருவனும் தன்னுடைய மதத்தையே பின்பற்ற வேண்டும். கிறிஸ்தவன் கிறிஸ்தவ மதத்தையும், முஸ்லிம் முகம்மதிய மதத்தையும் பின்பற்ற வேண்டும். இந்துக்களுக்கோ ஆரிய ரிஷிகள் ஏற்படுத்திய புராதன இந்துமதம்தான் உத்தமமானது.

உண்மையான மதப்பற்றுள்ள ஒருவன் தன்னுடைய மதம் மட்டுமல்லாமல் பிற மதங்களும் உண்மையை நாடி அடைவதற்கேற்ற மார்க்கங்கள் என்றே கருத வேண்டும். நாம் எப்போதும் பிற மதங்களிடம் அன்பு பாராட்டுகிறவர்களாகவே இருக்க வேண்டும்.

பிரம்மம் என்று வேதாந்திகள் கூறும் பொருளைத்தான் ஆத்மன் என்று யோகிகளும், பகவான் என்று பக்தர்களும் கூறுகிறார்கள். பூஜை செய்யும்போது அர்ச்சகன் என்று சொல்லப்படும் பிராம்மணனே, மடைப்பள்ளியில் வேலை செய்யும்போது சமையற்காரன் எனப்படுகிறான்.

ஒரே வஸ்துவான தண்ணீரை, சிலர் ஜலம் என்றும், சிலர் வாரி என்றும், சிலர் அக்வா என்றும், சிலர் பானீ என்றும், சிலர் வாட்டர் என்றும் வேறு வேறு வார்த்தைகளால் அழைக்கின்றனர். அதுபோல, ஒரே சச்சிதானந்தமாகிய பொருளைச் சிலர் கடவுள் என்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஹரி என்றும், சிலர் பிரம்மம் என்றும் வேறு வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

தங்கம் என்னும் ஒரே உலோகத்தைக் கொண்டு வெவ்வேறு பெயரும் உருவமும் கொண்ட பலவிதமான நகைகளைச் செய்கிறார்கள். அதுபோலவே ஒரே ஆண்டவன் வேறு வேறு பெயர்களாலும் வடிவங்களாலும் வெவ்வேறு தேசங்களிலும் காலங்களிலும் ஆராதிக்கப்படுகிறான். அவ்விதம் ஆராதிக்கப்படும்போது சிலர் அவனைப் பிதாவாகவும், சிலர் தாயாகவும், சிலர் தோழனாகவும், சிலர் நாயகனாகவும், சிலர் அந்தர்யாமியாகவும், சிலர் இனிய பாலகனாகவும் இவ்வாறு வேறு வேறு மனோபாவனைகளுடன் கொண்டாடுகிறார்கள். என்றாலும் இவ்விதம் பல்வேறு விதங்களிலும் ஆராதிக்கப்படுகிறவன் ஒருவன்தான்.

ஓம்

விஜய தீபம்

உபநிஷதச் சிந்தனைகள்

பேய் பிடித்திருப்பவனுக்குத் தனக்குப் பேய் பிடித்திருக்கிறது என்ற விவரமே தெரியாது. அதேபோல அவித்தை, மாயை, அஞ்ஞானம் என்று சொல்லப்படும் அறியாமைப் பேய்க்கு உட்பட்டு, பல நூறு உலக ஆசைகளை நாடிக் கொண்டிருப்பவனுக்குத் தன்னுடைய உண்மை யான இயல்பு தெய்வத்தன்மைதான் என்பது விளங்குவதில்லை.

தங்களுடைய உண்மை இயல்பு தெய்வத் தன்மை என்று உணர்ந்தவர்கள், மாயையி லிருந்து விடுபடுவதற்காக ஆத்மசாதனைகளை மேற்கொண்டு உண்மை இயல்பாகிய கடவுள் நிலையை அடைந்துவிடுகிறார்கள்.

ஆத்மஞானம் அடையப்பெற்ற மகான்கள் அவித்தையைக் கடந்தவர்கள்; ஆறு கடலைச் சென்றடைவதைப் போல, உயர்வற உயர்நல மாகிய பரம்பொருளோடு கலந்தவர்கள். இத் தகைய நிலையைப் பெறாதவர்கள் அனைவருமே, குறைந்த அளவுக்கோ அதிகமான அளவுக்கோ அவித்தைக்கு உட்பட்டவர்களே ஆவர்.

மக்களிடம் ஆத்மஞானத்தை அடையும் ஆர்வவேட்கை (அருள்தாகம்) எவ்வளவுக்கு எவ்வளவு பலமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவித்தையின் பிடியும் தளர்ந்து பலமற்றதாகிவிடுகிறது. தீவிர ஆத்மசாதகர்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே ஆவர்.

யமதர்மராஜன், ஆத்மஞானிகளையும், தீவிர ஆத்மசாதகர்களையும் தவிர்த்து, மற்றுமுள்ள மக்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"பரலோக விஷயமும் ஆத்மஞானமும் அவற்றில் கவனம் இல்லாதவனுக்கும், பொருளில் மோகம் அடைந்து மதியிழந்து (அறிவு வளர்ச்சி பெறாத குழந்தைகளைப் போல) உள்ள அவிவேகிக்கும் விளங்கமாட்டா. 'இதுவே லோகம், பரலோகம் என்று ஒன்றும் கிடை யாது' என்று எண்ணும் அவன் மீண்டும் மீண்டும் மிருத்யுவாகிய (மரணதேவனாகிய) என் வசம் அகப்படுகிறான்."*

—கட உபநிஷதம் 2-6

இந்த மந்திரம், ஆத்மஞானம் அடையப் பெறாதவர்களும் அவித்தை நிறைந்தவர்களு மாகிய உலகப் பற்றுள்ளவர்களின் சிந்தனைகள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பதைக் குறிப்பிடுகிறது.

பரலோக விஷயமும் ஆத்மஞானமும்

முதலாவதாக, ஒருவனுக்குப் பரலோக உண்மைகளில் ஈடுபாடு இருக்க வேண்டும். ஆன்மிக உலகின் திறவுகோல் போல விளங்கும் இத்தகைய ஈடுபாடு, இறைவனின் திருவரு ளாலும் பூர்வஜன்மங்களின் நல்ல புண்ணிய சம்ஸ்காரங்களாலும்தான் உண்டாகிறது என லாம். அவ்விதம் பூர்வஜன்ம சம்ஸ்காரங்கள் இல்லாதவர்கள், பொதுவாக உலகப்பற்று நிறைந்தவர்களாகவே இருப்பார்கள்.

உலக வாழ்க்கை முடிந்து உடல் வீழ்ந்த பிறகு, ஜீவன் பரமாத்மாவோடு ஐக்கியமாகும் சூட்சுமமான உயர்ந்த ஒரு நிலையை ஒருவன் பெற முடியும் என்பது உண்மையிலும் உண்மை.

---

* ந ஸாம்பராய: ப்ரதிபாதி பாலம்
ப்ரமாத்யந்தம் வித்த-மோஹேந மூடம் |
அயம் லோகோ நாஸ்தி பர இதி மாநீ
புந: புநர்-வச-மாபத்யதே மே ||

இதுபோன்ற உண்மைகள் என்றென்றைக்கு மாக எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன. என்றாலும், 'ஆறு நிறையத் தண்ணீர் ஓடினாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்' என்பதைப் போலவும், தாமரையின் அருகிலேயே இருந்தாலும் அதிலுள்ள தேனைப் பயன்படுத்திக் கொள்ளாத தவளையைப் போலவும், உலகப்பற்றில் தோய்ந்து அவித்தை தடித்துள்ள ஒருவனுக்கு மறுமையைப் பற்றி நமது மகரிஷிகள் சுய அனுபவமாகக் கண்டறிந்த அவ்வளவு உண்மைகளும் பயன்படாமலேயே போகின்றன. பணத்தின் மீதும் அவை போன்ற உலகப் பொருள்களின் மீதும் அவன் கொண்டுள்ள பெரும் பற்று, அவனது கண்களை மறைத்து, அவனை அந்தகாரம் சூழப்பெற்ற அவிவேகத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறது.

அவனைப் பொறுத்தவரையில், உண்பதும் உடுப்பதும் குடிப்பதும் மனைவியும் மக்களும் உற்றமும் சுற்றமுமே உண்மையில் இந்த உலகம் என்று நினைக்கிறான். காமாலைக் கண்ணுக்கு எல்லாமே மஞ்சள் நிறமாகத் தெரிவது போல, அஞ்ஞானம் நிறைந்த அவன், 'இவையே உண்மை, இவற்றைவிட மேலானது ஒன்று இல்லை' என்று நினைக்கிறான். இவ்விதம் நினைத்து வாழும் வாழ்க்கை, தன்னை அழிவுப் பாதையை நோக்கிச் செலுத்திக்கொண்டிருக்கிறது என்பதை அவன் உணர்வதே இல்லை.

'எல்லாமே இரவல்தான். யாரும் யாருக்கும் சொந்தமில்லை. எதுவும் ஒருவனுக்குச் சொந்தமில்லை. கடவுளைத் தவிர வேறு உண்மை இல்லை' என்று தீவிர ஆத்ம சாதகன் கருதுகிறான். அந்தக் கருத்தில் உறுதிப்பட்டுவிட்ட அவனுக்குக் கடவுள் ஒருவர் மட்டுமே உண்மையாக இருப்பதைப் போல, அஞ்ஞானிக்கு இந்த உலகம் மட்டுமே உண்மையாக இருக்கிறது.

பரலோக உண்மைகளில் ஈடுபாடும் அதை அடைய மேற்கொள்ளும் சாதனங்களும் ஒருவனை எல்லாப் பந்தங்களிலிருந்தும் விடுவிக்கின்றன; ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெறச் செய்கின்றன.

மறுமையைப் பற்றிய உண்மையை எடுத்துச் சொல்லி, புலன்களைக் கடந்த அமரநிலையை அடையும்படி மனிதனை ஊக்குவிப்பதே உபநிஷத்தின் நோக்கம். எல்லா மதங்கள், மகான்களின் உபதேசங்களுக்கும் இதுவே நோக்கம். இந்த மந்திரத்தின் மூலமும் உபநிஷதம் இதையே மறைமுகமாகச் சொல்லுகிறது.

''உடல் முதலிய தொகுதிகளைத் 'தான்' அல்லது ஆத்மா எனக் கொள்வது அவித்தை அல்லது அஞ்ஞானம்.

''(வெளிச்சம் குறைந்த இடத்தில்) ஒரு கயிறு பாம்பு என்று கருதப்படுவதைப் போலும், முத்துச் சிப்பி வெள்ளி என்று கருதப்படுவதைப் போலும், அஞ்ஞானியால் உடல் ஆத்மா என்று கருதப்படுகிறது'' என்று ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.



இப்படியெல்லாம் அஞ்ஞானத்தில் மதி மயங்கியிருந்தாலும், உலகப்பற்றுக் கொண்டவன் தன்னை மிகமிகப் புத்திசாலி என்றும், சாமர்த்தியமாக வாழ்வதாகவும் நினைக்கிறான்! மீனவன் வீசும் வலையில் சிக்கிக்கொள்ளும் மீன், வலையின் அடியில் சென்று, தான் புத்திசாலித்தனமாக வலைக்குத் தப்பிவிட்டதாகவும் பாதுகாப்பாக இருப்பதாகவும் நினைத்துக்கொள்கிறது. ஆனால் சிறிது நேரத்தில் வெளியே இழுக்கப்பட்டு மீனவனின் கைக்குள் அந்த மீன் சிக்கும்போது அதற்கு அழிவே ஏற்படுகிறது. உலகப்பற்றுக் கொண்டவன் தன்னை மிகவும் சாமர்த்தியசாலியாக நினைத்துக் கொள்வதும், முடிவில் அவனை இப்படிப்பட்ட பந்தங்கள் என்ற அழிவிலேயே கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கிறது.

பிரவிருத்தி மார்க்கம், தர்மம், நீதி, ஒழுக்கம் ஆகியவற்றுக்கு உட்பட்ட சில வகையான வைதிகக் கிரியைகளைப் பற்றி வேதம் சொல்லியிருக்கிறது. அவற்றைச் செய்ய வேண்டிய விதிமுறைகளின்படியே தவறாமல் ஒருவன் அனுஷ்டித்தால், சொர்க்கலோகம் முதற்கொண்டு பிரம்மலோகம் வரையிலும் உள்ள

சூட்சுமமான உயர்ந்த உலகங்களை அடைய முடியும். வேதம், பிரவிருத்தி மார்க்கத்தையும் கடந்ததும், அதைவிட ஒப்புயர்வு இல்லாததுமாகிய ஞான மார்க்கத்தைப் பற்றியும் நல்ல பரிபக்குவம் பெற்ற சாதகர்களுக்குப் போதிக்கிறது. அதன்படி, விவேக வைராக்கியத்துடன் தலைசிறந்த தியான வாழ்க்கை வாழ்பவன், பிரம்மத்தோடு ஒன்றுபடும் நிலையைப் பெறுகிறுன்.

இவை போன்ற பரலோக, இந்திரியங்களைக் கடந்த உண்மைகளை இந்த மந்திரம் குறிப்பிடும் மக்கள் உணர்வதே இல்லை. அதாவது பிரவிருத்தி நெறியையும் அவர்கள் உணர்வதில்லை; நிவிருத்தி நெறியையும் அவர்கள் உணர்வதில்லை.

முதலாவதாக, பிரவிருத்தி நிவிருத்தி ஆகிய இரண்டு நெறிகளையும் பற்றிய உண்மைகளை, உள்ளது உள்ளபடியே சாஸ்திரங்களின் துணையைக் கொண்டும் சான்ஞேர்களின் துணையைக் கொண்டும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவ்விதம் புரிந்துகொண்டால்தான், அதற்கு அடுத்த படியில் அவற்றைப் பின்பற்றவும் அடையவும் முயற்சியை மேற்கொள்ள முடியும். ஞான மார்க்கத்தைப் பின்பற்றி ஜீவன்முக்தனுவது என்பது மிகமிகப் பெரிய விஷயம். இப்போதைக்கு அது நமக்கு எட்டாத மிகவும் நீண்ட தொலைவிலேயே இருந்துகொண்டிருக்கிறது. ஆனுல் அந்த உண்மைகளைக் கருத்தளவிலாவது நாம் முதலில் தெரிந்துகொண்டால்தானே, பிறகு அதை அடைவதற்கு உரிய முயற்சியையாவது மேற்கொள்ள முடியும்?

இவ்வுலக வாழ்க்கையோடு எல்லாமே முடிந்து போகிறது என்பது இல்லை. மறுவுலக வாழ்க்கை என்ற ஒன்று இருப்பது உண்மையிலும் உண்மை. இந்த உண்மைகளைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் இல்லாதவர்களே அவிவேகிகள். ஆகவே அவர்களைப் 'பாலர்கள் (குழந்தைகள்)' என்று மரணதேவன் குறிப்பிடுகிறுன். வளர்ந்து பெரியவர்களாக இருந்தாலும், அறிவு முதிர்ச்சியைப் பெருத காரணத்தால் மீசை முளைத்த குழந்தைகளாக மட்டுமே அவர்கள் இருக்கிறுர்கள். இந்த வகையைச் சேர்ந்த மக்கள் மிகமிகப் பெரிய நஷ்டத்துக்கு ஆளாகிறுர்கள். ஆன்மிக இழப்புத்தான் அந்த நஷ்டம். உண்மையான இழப்பும் அதுதான்; உண்மையான நஷ்டமும் அதுதான்; உண்மையான மரணமும் அதுதான்; உண்மையான தற்கொலையும் அதுதான்.

உயிர் நீங்கிய பிறகு உடல் விழுவதைவிடவும், மிகப் பெரிய ஆபத்தாக விளங்குவது ஆன்மிக இழப்பாகும். ஏனென்ருல், உடல் விழுவது என்பது பல பிறவிகளிலும் நாம் சர்வ சாதாரணமாக நடத்தி வரும் ஒரு விஷயம் தானே!

பின்வரும் வேதவாக்கியம் ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியது:

''இங்கேயே ஒருவன் உண்மையை அறிந்தால் அவன் அழியாமல் இருக்கிறுன்; இங்கே அறியாவிட்டால் பெரும் அழிவு ஏற்படுகிறது. பொருள்தோறும் ஆத்மாவை ஆராய்ந்து கண்டு கொண்ட தீரர்களே இவ்வுலகை விட்டுச் சாகாதவர்கள் ஆகின்றனர்.''*

—**கேனுேபநிஷதம், 2-5**

[தொடரும்]

* இஹ சேதவேதீ-தத ஸத்யமஸ்தி,
ந சேதிஹாவேதீந் மஹதீ விநஷ்டி: |
பூதேஷு பூதேஷு விசித்ய தீரா:
ப்ரேத்யாஸ்மால்-லோகா-தம்ருதா பவந்தி ||

வஞ்சகமின்றி நியாயமாய் நடந்தால் எந்தக் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டும்?

—**கன்பூஷிய மதம்**

அறியாமை மிக்கவர்கள் தங்கள் பேச்சை நிறுத்தி மௌனத்தைக் கடைப்பிடித்தால் உலகத்தில் கலக்கமே இல்லை.

—**சாக்ரட்டீஸ்**

கொள்கைகள் வெவ்வேருக இருந்தாலும் அவரவர் தம் கொள்கையைச் சரிவரக் கடமையுணர்ந்து நிறைவேற்றுவார்களானுல் அவரவருக்குக் கிடைக்கும் பலன்களில் வித்தியாசம் இருக்க நியாயமில்லை.

—**ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள்**

அங்கே அழைத்துச் செல்லாதே !

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

அம்பிகையின் கருங்குழலுக்கு உவமை சொன்ன காரைக்காலம்மையார் இப்போது உமாதேவியை நன்ருகப் பார்க்கிருர். அந்தப் பெருமாட்டியின் கூந்தல் முதுகுப் பக்கத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. நீளமும் அடர்த்தியும் பரப்பும் உடைய அக் கூந்தல் அன்னையின் முதுகு முழுதும் பரந்து காட்சியளிக்கிறது. இந்தக் கூந்தற் பரப்பினிடையே அன்னையின் முதுகு சிறிதாக, சிறுபுறமாகத் தோன்றுகிறது. அம்பிகை எவ்வளவு அழகாக இருக்கிருள்! கூந்தலழகை அனுபவித்த அம்மையார் அன்னையின் திருக்கரத்தைப் பார்க்கிருர். கைநிறைய வளை அணிந்திருக்கிருள் அம்பிகை; கோல் வளையாளாக விளங்குகிருள். அவளைத் தன்



பாகத்திலே இறைவன் வைத்திருக்கிருன். அம்பிகை அவன் பங்கில் அமர்ந்திருப்பதனுல் அவனுடைய தோற்றத்தில் அழகு மிகுகிறது. அவனைப் பார்ப்பதைவிட அவளைப் பார்ப்பதற்கே கண் ஓடுகிறது. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அவள்.

இத்தகைய அழகிய பெண்ணைத் தன் பங்கில் இறைவன் வைத்திருக்கிருன். அடியவர்களுக்குக் காட்சியளிக்கும்போது அம்மையுடன் வருகிருன். அந்தக் காட்சியைக் காண இனிக்கிறது. திருக்கோயில்களில் அவன் அன்னையோடு வீற்றிருப்பதும் அழகான கோலந்தான்.

அன்னையை விட்டுப் பிரியாமல் எப்போதும் இருப்பவன் இறைவன். எங்கே போனுலும் அவளோடு போகிருன். அதெல்லாம் சரிதான். ஆடவர்கள் போகும் இடங்களுக்கெல்லாம் பெண்கள் போக முடியுமோ? ஆடவர்கள் துணிச்சல்காரர்கள். எங்கும் போவார்கள். போர்க்களத்துக்குப் போய்ச் சண்டை போடுவார்கள். அங்கே பெண்களை அழைத்துச் செல்லலாமோ?

சிவபெருமான் கோயிலிலும் வீதியிலும் தேவலோகத்திலும் கைலாசத்திலும் உலா வரும்போது உமாதேவியோடு போவது பொருத்தமான காரியம். அப்படிப் போவதனுல் அன்பர்கள் அருள் பெறுகிருர்கள். ஆனுல் அப் பெருமான் அந்த இடங்களுக்கு மட்டுமா போகிருன்? அவன் சுடுகாட்டுக்குக்கூடப் போகிருன். நல்ல இராத்திரி வேளையில் அங்கே போகிருன். தீக்கு நடுவில் ஆடுகிருன். அவனேடு அங்கே இருப்பவர்கள் யார்? பேய்கள்! பேய்கள் ஆடும் ஈமத்தில் தீயில் அவன் ஆடுகிருன்.

அவன் ஆடட்டும்; அதைப்பற்றிக் குறை கூற நாம் யார்? அங்கே பெண்கள் போகலாமோ? சுடுகாட்டில் நள்ளிரவில் பேய்க்கு நடுவே அழகான பெண்ணை அழைத்துக்கொண்டு போகலாமோ? அந்தப் பெண் அஞ்சமாட்டாளோ? அவன் அவளை அழைத்துக்கொண்டு போகிருன் என்பதைக் கேட்டாலே நமக்குக் குலை நடுங்குகிறதே!

பட்டப்பகலில் அழகான மண்டபத்தில் அரம்பையர்கள் கவரி வீச மாணிக்கச் சிங்காதனத்தில் தன்னுடன் வீற்றிருக்கச் செய்து, எல்லாரும் இந்தத் திவ்ய தரிசனத்தைக் கண்டு பூரித்து அருள் பெறும்படி செய்வதுதானே முறை? அதை விட்டுவிட்டுப் பயங்கரமான நள்ளிரவில், நினைத்தாலே அச்சத்தை உண்டாக்கும் சுடுகாட்டில், கண்டால் கதிகலங்கும் பேய்கள் ஆடுகின்ற சூழ்நிலையில், நெருப்புக்கு நடுவிலே இறைவன் தாண்டவம் ஆடும்போது அம்பிகையை அங்கே நிற்க வைக்கலாமோ? அந்த இடத்துக்கு அவன் அவளை அழைத்துச் செல்லலாமோ?

அவள் அஞ்சமாட்டாளா? அந்தப் பெருமாட்டியின் அழகைப் பார்த்து மகிழ அங்கே யார் இருக்கிருர்கள்? சுடுகாட்டில் எலும்பும் நிணமும் உள்ள சூழ்நிலையில் உள்ள பேய்

களுக்கு அவள் அழகைப் பார்க்கும் கண் ஏது? பெண் என்றால் பிடித்து உலுக்க வேண்டும் என்றல்லவா பேய் விரும்பும்? அத்தகைய ஆபத்தான இடத்தில் பெண்ணை அழைத்துச் செல்லலாமா?

அவன்தான் அச்சம் இல்லாமல் காலில் அணிந்த கழல் ஜல் ஜல் என்று ஒலிக்கப் பேய்களுக்கு நடுவில் கூத்தாடுகிறான். உமாதேவிக்கு அந்த ஆட்டத்தைக் காட்ட வேண்டுமென்று அழைத்துச் செல்கிறானா? அம்பிகை அதைப் பார்த்து நடுங்கமாட்டாளா? இந்த இறைவனுக்கு இது உசிதம் அன்று என்று தெரியவில்லையே! 'இனிமேல் இந்தப் பைத்தியக்காரச் செயலைச் செய்ய வேண்டாம்' என்று சொல்லிப் பார்க்கலாமா?

தன் பிள்ளை அநுசிதமான காரியம் ஒன்றைச் செய்ய, அதைக் கண்ட தாய், ''அப்படிச் செய்யாதே அப்பா'' என்று சொல்வது போலக் காரைக்கால் அம்மையார் இறைவனிடம் நெருங்கிச் சொல்கிறார்:

''நள்ளிரவில் சுடுகாட்டில் பேயோடும் தீயில் தாண்டவம் ஆடுகிறாயே, அந்த இடத்துக்கு, கூந்தல் தாழும் சிறு முதுகையும், திரட்சியான வளையையும் உடைய அம்பிகையை உன் பாகத்தில் அழகாக வைத்துக்கொண்டு போக வேண்டாம்'' என்று கேட்டுக்கொள்கிறார். 'நீ தனியாகப் போய் எப்படியானாலும் கூத்தாடு; இவளைமட்டும் அழைத்துக்கொண்டு போகாதே' என்று குறிப்பிடுகிறார்.

குழல்ஆர் சிறுபுறத்துக்
கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்துஏக
வேண்டா — கழல்ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப்
பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீஆடும் அங்கு.

[காலில் அணிந்த வீரகண்டை ஒலிக்க, பெரிய நள்ளிரவில், ஈமமாகிய பெரிய சுடுகாட்டில், பேய்களோடும் வெப்பம் தாங்குவதற்கு அரிய நெருப்பில் நீ தாண்டவம் ஆடும் அவ்விடத்துக்கு, கூந்தல் தாழ்ந்திருக்கும் சிறிய முதுகையுடைய திரட்சியான வளைகளை அணிந்த உமாதேவியை உன் வாமபாகத்தில் அழகாக வைத்துக்கொண்டு போக வேண்டாம்.

குழல்-கூந்தல். புறம்-முதுகு. கோல்-திரட்சி. கோல்வளை-உமாதேவி; அன்மொழித் தொகை. கழல்-காலில் வீரர்கள் அணியும் மணியோடு கூடிய அணிகலன். வீரகண்டை. பேரிரவு-நள்ளிரவு. ஈமமாகிய பெருங்காடு; ஈமம்-மயானம். ஆரழல்-அரிய நெருப்பு; தாங்குவதற்கரியது. நீ ஆடும் அங்குக் கோல்வளையை அழைத்து ஏக வேண்டா.]

இவ்வாறு இறைவனுக்கு அறிவுரை கூறுவனவாக உள்ள பாடல்களில் காரைக்காலம்மையாரின் தாய்த்தன்மை புலனாகிறது.

இது **அற்புதத் திருவந்தாதியில் 51-ஆம்** பாட்டு.



சிந்தனை செய்யாமல் படிப்பது பயனற்றது. படிக்காமல் சிந்தனை செய்வது அபாயகரமானது.
—ஓர் அறிஞர்

என்னுடைய மிகவும் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே அதைச் செய்தீர்கள்.
—இயேசு கிறிஸ்து

இறைவன் திருவுள்ளத்துடன் தனது எண்ணத்தை ஒப்படைப்பது ஆத்ம சாதனம்.
—அருள் விருந்து

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

'நம்பி'

> கடவுளின் தாய்மை இயல்பை உலகிற்கு விளக்குவதற்காக அன்னை அவதரித்தார். அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

சமரச நோக்கம்

அன்னை சாரதாதேவியார் அனைவரிடமும் சமய பேதத்தைப் பாராட்டாமல், சமபாவத்துடன் நடந்துகொண்டார். இந்து என்ற காரணத்துக்காகவோ, முஸ்லிம் என்ற காரணத்துக்காகவோ யாரையும் அவர் புறக்கணித்ததில்லை.

மேற்கு வங்காளத்தில் பட்டு உற்பத்தித் தொழிலில் முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்தார்கள். முசுக்கட்டைச் செடிகளில் பட்டுப் பூச்சிகளை வளர்த்து, பட்டு உற்பத்தி செய்தார்கள்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிநாட்டுப்போட்டியின் விளைவாக, வங்காளத்தில் முஸ்லிம்கள் செய்துவந்த பட்டு உற்பத்தித் தொழில் நசித்துவிட்டது. இதனால் முஸ்லிம் தொழிலாளர்கள் பெரிதும் அவதியுற்றனர். பஞ்சம் வேறு அந்தப் பிரதேசத்தில் பரவி, முஸ்லிம்களின் அவதியைப் பெரிதாக்கிவிட்டது.

இதன் விளைவாகப் பட்டு உற்பத்தி செய்து வந்த முஸ்லிம் தொழிலாளர்கள் திருட்டுத் தொழிலில் ஈடுபடலானார்கள். இது காரணமாக, இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிணக்கமும் பூசலும் அதிகமாயின. அப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவிகள் அன்னை சாரதாவுக்கு ஜயராம்பாடியில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். அதன்படி வீடு கட்டும்போது, வறுமையால் நலியும் முஸ்லிம்களை அவர்கள் வேலைக்கு அமர்த்திக்கொண்டார்கள்.

இது இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை. இதனால் கிராமத்தாருக்கும் இந்துக்களுக்கும் தீங்கு நேரும் என்று கிராமவாசிகள் அஞ்சினார்கள். தங்களுக்குள்ள இந்த அச்சத்தை வெளிப்படையாகவும் தெரிவித்தார்கள்.

ஆயினும் நாளடைவில் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் திருந்தி நல்லவர்களாக மாறி வருவதைக் கிராமவாசிகள் கண்டார்கள்.

திருட்டுத் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் ஒருவன், எப்படி அன்னையின் அன்புக்குப் பாத்திரமானான் என்பதை அடியில் வரும் நிகழ்ச்சி அறிவிக்கிறது.

தான் செய்து வந்த பட்டுத் தொழில் நசித்துப் போனதனால் திருடனாகிவிட்ட முஸ்லிம் ஒருவன், ஒரு நாள் கொஞ்சம் வாழைப் பழங்களை எடுத்துக்கொண்டு அன்னை சாரதாவைக் காண வந்தான். அவன் அன்னையைச் சந்தித்து, ''அம்மா! குருதேவருக்காகக் கொஞ்சம் வாழைப்பழங்கள் கொணர்ந்திருக்கிறேன். ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று சொன்னான்.

உடனே அவற்றை ஏற்கும் பாவனையில் தம் கைகளை நீட்டி, ''நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். குருதேவருக்கென்று நீ கொண்டு வந்திருக்கும்போது எப்படி என்னால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியும்?'' என்று சொல்லிப் பழங்களை அன்னை ஏற்றுக்கொண்டார்.

டாக்டர் மனைவி

எல்லாவற்றையும் வேறுபாடின்றி அன்னை சமமாக நேசித்தார் என்பதற்கு அடியில் வரும் உரையாடல் அரிய சான்றாக இருக்கிறது.

ஒரு முறை ஒரு டாக்டரின் மனைவி அன்னையைத் தரிசித்து ஆசிபெற வந்தாள். அவள் வந்து அன்னையை வணங்கிவிட்டு, ''அம்மா! உங்கள் புதல்வருக்கு அதாவது என் கணவருக்கு வைத்தியத் தொழிலில் அதிக வருவாய் கிடைக்க ஆசிர்வதியுங்கள்'' என்று வேண்டினாள். அந்தப் பெண்மணி அவ்வாறு வேண்டியதும் அன்னை சாரதா அவளைக் கடுமையாக உற்றுப் பார்த்தார். பிறகு அவளிடம், ''மருமகளே! என்னிடம் இத்தகைய ஆசியை நீ கோருவது முறையாகுமா? உன் கணவருக்கு வருவாய் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக, என் மற்றப் புதல்வர்களும் புதல்வியரும் நோய்வாய்ப்பட வேண்டுமா என்ன? இத்தகைய ஆசிர்வாதத்தை என்னால் ஒருபோதும் செய்ய முடியாது. உலகிலுள்ள அனைவரும் நலமுடன்

வாழ நாம் எல்லோரும் சேர்ந்து உழைப்பதே முறை'' என்று புத்திமதி சொன்னார்.

மனிதகுலம்

அன்னை சாதிபேதம், நிறபேதம், இனபேதம், நாடுபேதம் இவற்றைப் பாராட்டியதில்லை. மனிதகுலம் அனைத்தும் ஒரே குலம் என்று அவர் முழுக்க முழுக்க நம்பினார். நம்பியதோடு மட்டுமல்லாமல் வேற்றுமை பாராட்டாமல் அனைவரிடமும் சமமாக நடந்துகொண்டார். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சீடர்களுள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் இருந்தார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் உள்ளன. சீடர்களும் இருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் தம் புதல்வராகவும் புதல்வியராகவும் அன்னை கருதினார்.

ஒரு சமயம் இராமகிருஷ்ணர் நீண்ட நேரம் சமாதியில் ஆழ்ந்துபோனார். பிறகு சமாதி கலைந்து, அன்னை சாரதாதேவியிடம், ''இதோ பார், நான் ஒரு நாட்டிற்குச் சென்றேன். அங்குள்ள மக்கள் அனைவரும் வெள்ளை நிறத்தவராக இருப்பதைக் கண்டேன். எத்தகைய ஆழமான பக்தி அவர்களுக்கு இருக்கிறது தெரியுமா?'' என்று சொன்னார்.

அன்னை சாரதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'வெள்ளை நிறத்தில் மனிதர்களும் இருக்கிறார்களா?' என்று அவர் அதிசயித்தார். கிராமப்புறச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த அவருக்குப் பல்வேறு நிறத்தில் மனிதகுலம் அமைந்திருக்கிறது என்ற உண்மை முதலில் தெரியாமலிருந்தது.

பிற்காலத்தில் வெள்ளை நிற ஆடவர்களையும் மகளிரையும் சந்தித்தபோது ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னதன் உண்மை அன்னை சாரதாவுக்குப் புரிந்தது.

இந்தியாவுக்கு வந்தபின், சகோதரி நிவேதிதை, இந்திய மாதர்குலத்துக்குச் சேவை செய்ய ஆர்வம் கொண்டார். இந்திய மாதர் ஒருவருடன் வசித்து, நடையுடை பாவனைகளைத் தெரிந்துகொண்டால்தான் இந்திய மாதருக்குச் சேவை செய்வது, தகுந்த பலன் அளிக்கும் என்று அவர் நம்பினார். ஆகவே இந்திய மாது ஒருவருடன் தாம் வசிக்க விரும்புவதை, சுவாமி விவேகானந்தரிடம் அவர் தெரிவித்துக்கொண்டார்.

இந்தக் கருத்தை அன்னையிடம் தெரிவித்தபோது, சகோதரி நிவேதிதாவைத் தம் புதல்வியாக ஏற்றுக்கொள்ள அன்னை சாரதா சம்மதித்தார்.

கல்கத்தாவில் அன்னையுடன் சகோதரி நிவேதிதை தங்கினார். இந்திய மாதர்களைப்போலவே அன்னையின் அருகே அவர் அமர்ந்துகொள்வார்; இருவருக்கும் இடையில் மொழி ஒரு தடையாக இருக்கவில்லை; உள்ளத்தின் மூலமே ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டனர்.



ஒரு முறை சகோதரி நிவேதிதை அன்னையைக் காண வந்து அவரருகில் அமர்ந்தார். அப்போது சகோதரி நிவேதிதைக்கு, தாம் கம்பளியால் பின்னிய விசிறி ஒன்றை அன்னை கொடுத்தார். ''இதோ இதைப் பெற்றுக்கொள்; உனக்காக இதை நான் பின்னினேன்'' என்று சொன்னார்.

சகோதரி நிவேதிதை விசிறியைப் பக்தியுடன் வாங்கிச் சிரசிலும் மார்பிலும் ஆர்வத்துடன் வைத்துக்கொண்டார். ''எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது!'' என்று உவகையோடு கூறினார்.

சுவாமி விவேகானந்தரிடம் சகோதரி நிவேதிதை கொண்டிருந்த குருபக்தியை அன்னையார் வெகுவாகப் பாராட்டினார். ''குருவினிடம் கொண்டிருக்கும் பக்தியினாலும், இந்திய நாட்டின் மீது கொண்டுள்ள அன்பினாலுமே, அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு, இந்த

நாட்டுக்கு அவள் வந்திருக்கிருள்'' என்று கூறினர்.

ஒரு நாள் சகோதரி நிவேதிதை, ''அம்மா! முற்பிறப்பில் நாங்கள் அனைவரும் இந்துக்கள் ஆவோம். குருதேவரின் போதனைகளைப் பரப்புவதற்காகவே நாங்கள் இப்போது மேலைநாடுகளில் பிறந்துள்ளோம்'' என்று கூறினர்.

இதைக் கேட்டு அன்னை சாரதாதேவியார் அகமகிழ்ந்தார்.

வெகுமதி

பிறர் தரும் வெகுமதிகளை அன்னையார் பத்திரமாகப் பேணிப் பாதுகாத்து வைத்துக் கொள்வார். பொருள்களின் மீதுள்ள ஆசை காரணமாக அவர் அவ்வாறு செய்யவில்லை. வெகுமதியாகக் கிடைத்த பொருள்களைப் பார்க்கும்போதெல்லாம், வெகுமதி தந்தவர்களின் நினைவு வரும். அற்பப் பொருளே ஆயினும் அதைப் புறக்கணித்து எறியலாகாது என்று அன்னை கூறுவது உண்டு.

ஒரு முறை சகோதரி நிவேதிதை, அன்னைக்குப் பட்டுத்துணி ஒன்றை வெகுமதியாக வழங்கினர். அதை ஒரு பொட்டலம் கட்டி அன்னை பேணி வைத்திருந்தார்.

ஒரு முறை துணிகளை எல்லாம் வெயிலில் காயவைக்க எடுத்தபோது, சகோதரி நிவேதிதை கொடுத்த பட்டுத்துணி கெட்டுப்போய் விட்டதை வெயிலில் உலர வைத்த சிலர் பார்த்தனர். உடனே அவர்கள் அன்னையிடம், ''அம்மா! பொட்டலத்தில் இருக்கும் இந்தப் பட்டுத்துணி கெட்டுப்போய்விட்டது. இதை வெளியே எறிந்துவிடலாமா?'' என்று கேட்டனர்.

அதற்கு அன்னை, ''இதை வெளியே எறியக் கூடாது. அன்புள்ள புதல்வி நிவேதிதை எனக்குத் தந்த வெகுமதி இது. அவள் ஓர் அற்புதப் பெண். முதலில் அவளால் என்னுடன் உரையாட முடியவில்லை. மொழி பெயர்ப்பாளர் மூலமாக நாங்கள் இருவரும் உரையாடினேம். பிறகு கொஞ்சம் வங்கமொழியைக் கற்றுக்கொண்டு, என்னுடன் வங்கமொழியிலேயே நிவேதிதை உரையாடினள். என்னிடம் அவளுக்கு அளவு கடந்த பிரியம். அவள் தந்த வெகுமதியைப் பார்க்கும்போதெல்லாம் அவளது நினைப்பு உண்டாகும்'' என்று கூறினர்.

நிவேதிதை காலமானதைக் கேட்டு, அன்னை கண்ணீர் உகுத்து அழுதார்.

ஐரோப்பிய மாதர்களுடன் அன்னை உரையாடியதோடு மட்டுமல்லாமல், ஐரோப்பியர்களின் பழக்க வழக்கங்களையும் அவர் கற்றுக் கொண்டார்.

ஒரு முறை ஐரோப்பிய மாது ஒருத்தி அன்னையைக் காண வந்தார். ஐரோப்பியர் வரவேற்கும்போது கைகுலுக்குவது போல, அன்னையும் அந்த மாதைக் கைகுலுக்கி வரவேற்ருர். பிறகு வங்கநாட்டு முறைப்படி, அந்த மாதின் மோவாயைத் தொட்டு முத்தம் கொஞ்சினர்.

அந்த ஐரோப்பிய மாது, அன்னையிடம், ''என் புதல்வி உடல்நலமின்றி இருக்கிருள். அவள் நலமடைய நீங்கள் ஆசீர்வதியுங்கள்'' என்று வேண்டினள்.

அன்னை வில்வ இலைகளையும் தாமரை இதழ்களையும் அவளிடம் கொடுத்து, ''இந்த இதழ்களை உன் புதல்வியின் தலையின்மீது வை. நோய் குணமாகிவிடும்'' என்று சொன்னர்.

ஐரோப்பிய மாது அவ்வாறே செய்தாள். அவள் புதல்விக்கு நோய் குணமாகிவிட்டது. அதன் பின்னர் அன்னையிடம் அந்த மாது அடிக்கடி வந்து போனள். பிறகு அன்னையிடம் மந்திரதீட்சை பெற்றுக்கொண்டாள். இந்த மாதை அன்னை அபாரமாக நேசித்தார். அதே போல் அவளும் அன்னையை அதிகமாக நேசித்தாள்.

உட்பகை, வெளிப்பகை எவையுமின்றிச் சாந்த நிலை எய்துவதே மானிட வாழ்வின் இறுதி இலட்சியம்.

—**முனிவர்கள்**

மாணவர் சமுதாயம், அறிவையும் நுட்பத்திறனையும் வளர்த்துக்கொள்வதற்காக மட்டும் படிக்கவில்லை. சிந்தனைப்போக்கு, மனநிலை ஆகியவற்றையும் நன்முறையில் மாற்றிக் கொள்ளக் கற்க வேண்டும்.

—**டாக்டர் ஸர் எஸ். ராதாகிருஷ்ணன்**



போதும் என்ற மனம்

அ. லெ. நடராஜன்

ஒரு சிற்றூரில் கணவனும் மனைவியும் பரம ஏழைகளாய் இருந்தார்கள். பாடுபட்டு உழைத்து அன்றாடம் கிடைப்பதை உண்டு திருப்தியுடன் வாழ்ந்தனர். 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழிக்கு இலக்காக அவர்கள் விளங்கினார்கள். நாள்தோறும் சாப்பாடு கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, கோயிலுக்குப் போகக் கணவனும் மனைவியும் ஒருபோதும் தவறமாட்டார்கள். தங்கள் குடிசைத் தோட்டத்தில் பூக்கும் மலர்களைப் பறித்துப் போய் இறைவனுக்கும் இறைவிக்கும் சூட்டி, உள்ளன்புடன் வழிபடுவார்கள்.

நாள்தோறும் இந்த ஏழைகள் எதற்காகக் கோயிலுக்குப் போகிறார்கள் என்று அக்கம்பக்கத்தில் வாழ்பவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

'கோயிலுக்குப் போய் எப்பொழுதும் திருப்தியுடன் திரும்புகிறார்களே! அதன் மர்மம் என்ன?' என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினார்கள்.

ஆனால், கோயிலுக்குப் போகும் கணவனும் மனைவியும் எதையும் பிரார்த்திப்பதில்லை. தங்களுக்கு இருக்கும் மனநிம்மதி நீடித்தால் போதும் என்று அவர்கள் கருதினார்கள்.

இந்த நிலையில் இறைவன், கணவன் மனைவி இருவரின் உளப்பாங்கைச் சோதிக்க எண்ணினான். கணவன் கோவிந்தசாமியும் மனைவி கோமதியும் அன்று தங்கள் பிழைப்பில் கிடைத்த பணத்தைக் கொண்டு, சோளக் கஞ்சியும் மிளகாய்த் துவையலும் செய்திருந்தார்கள்.

அதுசமயம் இறைவன் எளிய பிச்சைக்காரக் கோலத்தில் அவர்கள் வீட்டுக்கு வந்து, ''அம்மா! தாயே! பசியாய் இருக்கிறது. ஏதாவது சாப்பிடக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

''வா வா'' என்று பிச்சைக்காரனைக் கூப்பிட்டுச் சோளக் கஞ்சியை வயிறு நிறையப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும், விநோதமான அந்தப் பிச்சைக்காரன், ''தம்பி, உனக்குப் பணம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டால், அதை வாலிபத்தில் பெற விரும்புவாயா? அல்லது முதுமையில் பெற விரும்புவாயா?'' என்று கேட்டான்.

உடனே கோவிந்தசாமி, ''இறைவன் அருள் சுரந்து எனக்குப் பணம் தந்தால், அதை முதுமைக் காலத்தில் பெறுவதையே நான் விரும்புவேன். வாலிபப் பருவத்தில் உடல் நலமாயும் பலமாயும் இருக்கும். அப்போது பாடுபட்டு

உழைத்துப் பணம் தேட முடியும். முதுமைக் காலத்தில் அவ்வாறு பொருள் ஈட்ட முடியாது. பிறர் தயவை நாடி நாம் வாழ வேண்டியிருக்கும். ஆகையால், முதுமையில் கிடைப்பதை நான் விரும்புகிறேன்'' என்று கூறினான்.

பிறகு பிச்சைக்காரன், கோமதி பக்கம் திரும்பி, ''எந்தப் பருவத்தில் நீ பணம் பெறுவதை விரும்புகிறாய்?'' என்று கேட்டான்.

அதற்கு அவள், ''ஐயா! வாலிபப் பருவத்தில் பணம் கிடைப்பதையே நான் விரும்புகிறேன். அந்தப் பருவம்தான் அனுபவித்து ஆனந்தப்பட வேண்டிய பருவம். அந்தப் பருவத்தில் பணம் கிடைப்பதே நல்லது'' என்று சொன்னாள். மேலும் தொடர்ந்து அவள், ''ஐயா! முதுமைப் பருவத்தில் பணம் இருந்தால் இறைவனை மறக்க நேரிடும். கடைசிக் காலத்தில் இறைநினைப்பு இல்லாமலிருப்பது நல்லதல்ல'' என்று கூறினாள்.

இருவரின் உளப்பாங்கையும் திருப்தியையும் பக்தியையும் அறிந்த இறைவன், துணியும் உணவும் போதிய அளவு அவர்களுக்கு எப்பொழுதும் கிடைக்க அருள்பாலித்தார்.



1. **அருளருவி**

ஆசிரியர்: கவியோகி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், அடையாறு, சென்னை-600020. விலை: ரூ. 8.

2. **உணவில் புலால் தேவையா?**

ஆசிரியர்: கருப்பையா பி. ஏ., வெளியிட்டோர்: அகிம்சை நூலகம், 10, கந்தப்ப ஆச்சாரி தெரு, புரசைவாக்கம், சென்னை-600007. விலை: ரூ. 5.

3. **உவரியூர்த் தலபுராணம்**

ஆசிரியர்: கவிஞர் சா. வேலப்பன் B.Sc., வெளியிட்டோர்: திரு ப. க. சோ. தங்கசாமி ராஜன், பரம்பரை அறங்காவலர், உவரி ஸ்ரீ சுயம்புலிங்க சுவாமி திருக்கோயில். விலை: குறிப்பிடப்படவில்லை. கிடைக்கும் இடம்: கவிஞர் சா. வேலப்பன், B.Sc., திக்கிலான்விளை, தெற்குச் சூரங்குடி P.O., கன்னியாகுமரி மாவட்டம்.

4. **ஸ்ரீ ராமாநுஜர் பிள்ளைத்தமிழ்**

ஆசிரியர்: அருட்கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர். வெளியிட்டோர்: சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், 331/333 தம்பு செட்டித் தெரு, சென்னை-600 001. விலை: ரூ. 2-50.

5. **திருமுருகன் ஆயிரம் திருநாமங்கள்**

தொகுப்பு: மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்., வெளியிடுவோர்: ஸ்ரீ அழகிய கன்னி விநாயகர் கோவில் டிரஸ்ட், 35/867 சபாபதி தெரு, தோவாளை P.O., திருவனந்தபுரம்-695 023. விலை: ரூ. 1-50.



வள்ளிமலையும் முருகப் பெருமானும்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஆறுமுகப் பெருமானுடைய அடியார்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பல இருப்பினும், அவற்றுள் மிக மிக அவசியமான ஒரு கடமையுண்டு. கடமையை உணராமல் இருப்பது மடமை.

முருகப் பெருமானுடைய மெய்யடியார்களுக்கு இதனை வற்புறுத்திக் கூறுகிறேன். அன்பின் காரணமாக அறிவுறுத்துகின்றேன். முருகவேளின் வலப்புறத்தில் வள்ளிநாயகி; இடப் புறத்தில் தெய்வயானை; அவருடைய திருக்கரத்தில் வேலாயுதம். மனிதர்களுக்கு இன்றியமையாத தேவைகள் மூன்று : இம்மை, மறுமை, வீடு என்பன.

1. இந்த உலகத்தில் நல்வாழ்வு.

2. மேல் உள்ள சுவர்க்க உலகில் இன்ப வாழ்வு.

3. அதற்கு மேல் முக்திப் பேறு.

இந்த மூன்று நலன்களையும் தரவல்ல தெய்வம் முருகவேள். எம்பெருமானின் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ள வள்ளி இம் மண்ணுலகில் அவதரித்தவர்; அவர் மூலம் இக வாழ்வைத் தருவார். பெருமான் தம் இடப்புறத்தில் அமர்ந்துள்ள தெய்வவுலக மடந்தையாகிய தெய்வயானையம்மையின் மூலம், பர வாழ்வு (சுவர்க்க இன்பம்) தருவார். தம் திருக்கரத்தில் அமர்ந்திருக்கின்ற ஞானமாகிய வேலாயுதத்தால் வீடுபேற்றினை வழங்குவார்.

நமக்கு முதலில் இம்மை நலமும், பின்னர் மறுமை நலமும், அதற்குப் பின் முக்தி நலமும் முறையே வரவேண்டும். உடம்புடன் வாழ்கிற நமக்கு இம்மை நலம் அவசியம் வேண்டும். வீடு, வாசல், நிலம், புலம், வண்டி, வாகனம், துணி, மணி, பொருள், ஆடை, அணிகலம், மனைவி, மக்கள் என்பவை அனைத்தும் இம்மை நலங்களாம். இவற்றை வழங்கும் தேவி, வள்ளிப் பிராட்டியார். வள்ளியை வழிபடுவோர்க்கு இகவாழ்வு சிறக்கும்.

வள்ளிநாயகியார் திருஅவதாரம் புரிந்த திருத்தலம் வள்ளிமலை. இது தொண்டை நன்னாட்டில் இருக்கின்றது. வள்ளி பிறந்த இடம் வள்ளியூர் என்றும், நாகர்கோயிலுக்கு அருகில் உள்ள குமாரர்கோயில் என்றும் பலர் பலவாறு கூறுவார்கள். அவர்கள் அனைவரும் கந்த புராணத்தைக் கண்ணால்கூடக் காணாதவர்கள்.

கந்த புராணந்தான் சிறந்த பிரமாணம்; அதில் கூறுவதைக் காண்க. திருமாலின் இரு கண்களில் இரு நங்கையர் அவதரித்தனர்; ஒருத்தி அமுதவல்லி, ஒருத்தி சுந்தரவல்லி. இம் மங்கையர் இருவரும் முருகவேளை மணஞ் செய்ய விரும்பிச் சரவணப்பொய்கையில் பல காலம் தவம் புரிந்தனர். முருகவேள் தோன்றி அமுதவல்லியை விண்ணுலகிலும், சுந்தரவல்லியை மண்ணுலகிலும் பிறந்து, தவம் புரியுமாறு பணித்தருளினார். இதன் குறிப்பு யாது? மண்ணுலகில் தோன்றும் வள்ளியம்மையின் மூலம், ஆன்மாக்களுக்கு மண்ணுலக நலங்களையும் விண்ணுலகில் தோன்றும் தெய்வயானையம்மையின் மூலம் விண்ணுலக நலன்களையும் தரும் பொருட்டு என உணர்க. இகபரம் இரண்டும் தரும் தெய்வம் எம்பிரான். அதனால் அருணகிரிநாதரும், ''இகபரசௌபாக்யம் அருள்வாயே'' என்று பாடுகிறார்.

இறைவன் பணித்த வண்ணம் மூத்தவளான அமுதவல்லி, தானே ஒரு குழவியாகி, சூரபன்மனுக்கு அஞ்சி மேருமலையில் ஒளிந்திருந்த இந்திரனிடம் போய், ''நின் மகள் யான்'' என்றாள். அவளை இந்திரன் சத்தியவுலகிலே, மனோவதி நகரிலே, கற்பக மரத்தின்கீழ்த் தன் ஐராவதம் என்ற தெய்வயானையால் வளர்க்கச் செய்தனன். இளையாளாகிய சுந்தரவல்லி, மண்ணுலகிலே தொண்டை நன்னாட்டிலே, மேற்பாடிக்கு அருகில் உள்ள மகாபுனிதமான வள்ளிமலையில் வந்து, பன்னெடுங்காலம் தவம் புரிந்தாள்.

பின்னர் திருமாலே, அங்கே சிவமுனிவராகத் தோன்றித் தவம் புரிந்துகொண்டிருந்தார்.

இலக்குமிதேவி மான் வடிவில் வந்தாள். அந்த மானைத் திருமாலாகிய சிவ முனிவர் பார்க்க, அப் பார்வையால் சுந்தரவல்லி மான் வயிற்றில் புகுந்தாள். மான் வள்ளிக் குழியில் குழந்தையைப் பெற்றது.

திருமாலின் மற்றோர் அவதாரமாகிய உபேந்திரன் நம்பிராஜனுகைப் பிறந்தான். அந்த நம்பி பிராட்டியைக் கொண்டுபோய் வளர்த்தான். வள்ளியென்று பேர்புனைந்த எம்பிராட்டி வள்ளிமலையில் தினைப் புனம் காவல் புரிந்தனள். அத் தேவி தினைப் புனம் காத்தபோது அவள் ஆலோலப் பாடலைக் கேட்டுச் சராசரங்கள் எல்லாம் உருகின.

இங்ஙனம் சுந்தர ஞான மென் குறமாது ஞானத் தினைப்புனம் காத்திருந்தபோது, அப் பிராட்டியின் தவம் காரணமாகத் தணிகை நாயகன் வேடனுகவும் விருத்தனுகவும் வந்து, தன் வேதமும் காணுத விமல சரணுரவிந்தங்களை வைத்துப் பலகாலும் உலாவிய இடம் வள்ளிமலை என உணர்க.

அருணகிரிநாதர் முடிமீது முருகன் தன் அருண சரணமலரை வைத்துச் சூட்டினன். அந்த அருமையை அவர் கந்தரநுபூதியில் 44 ஆவது பாடலில் கூறுகிறுர். முருகன் திருவடியை என் சென்னிமேல் சூட்டினன். அத் திருவடி நான்கு இடங்களில் கமழும் தன்மையானது. அதாவது முருகன் பாதம் நான்கு இடங்களில் பட்டன என்கிறுர்.

1. முக்திவீடு, 2. தேவர்கள்தலை, 3. வேதம், 4. வள்ளிமலை.

நம்மால் முக்தி வீட்டையும், தேவர்கள் சென்னிகளையும், வேதங்களையும் காணமுடியாது. வள்ளி மலையைக் காணலாம்தானே? அப்பன் அடிமலர் பலகாலும் தோய்ந்த அற்புதத் தலம் வள்ளிமலை.

சாடுந் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது செல்லுமதோ
வீடுஞ் சுரர் மாமுடி வேதமும் வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

— கந்தரநுபூதி

இத்தகைய மகா புனிதம் தங்கிய வள்ளி மலையை ஒவ்வொரு முருகனடியாரும் தரிசித்து நலம் பெற வேண்டியது அவசியம்.



இது ஐந்தாவது படைவீட்டைச் சேர்ந்தது. முஸ்லிம் அன்பர்களுக்கு ஐந்து கொள்கைகள் உண்டு.

1. கடவுள் நம்பிக்கை, 2. வருவாயில் இரண்டரை சதம் தங்கள் மத அறத்துக்கு வழங்கல், 3. ஆண்டுக்கு ஒரு முறை முப்பது நாள் இரவில் உண்டு, பகலில் உண்ணுது நோன்பு நோற்றல், 4. தினம் ஐந்து வேளை தொழுதல், 5. ஆயுளில் ஒரு முறை நபிநாயகம் அவதரித்த மெக்காவுக்குச் சென்று சேவித்தல்.

நபிநாயகம் அவதரித்த மெக்கா சகாரா பாலைவனம் கடந்து போக வேண்டும். முஸ்லிம் அன்பர்கள் பல்லாயிரம் மைல்கள் கடந்து, குரு மகான் அவதரித்த மெக்காவுக்குச் சென்று வணங்குகிறுர்கள்.

இந்த முறையில் முருகன் அடியார்கள் எம் பிராட்டி வள்ளிதேவி அவதரித்த வள்ளிமலைக்குத் தம் ஆயுளில் ஒரு முறையாவது சென்று தரிசிக்க வேண்டும். இது மிக மிக அவசியம். அன்றி வள்ளிமலையில் நிகழ்ந்த ஓர் அதிசயத்தையும் இங்குக் கூறுகிறேன்.

சில வருடங்களுக்கு முன் வள்ளிமலையில் படித் திருப்பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அத் திருப்பணிக்கு அடியேன் தலைவன். வேலூர் வைத்தியபூபதி திரு அப்பாதுரை அவர்கள் செயலாளர். டாக்டர் அப்பாதுரை, வள்ளிமலையில் அடிவாரத்தில் தங்கித் திருப்பணியைக் கவனித்துக்கொண்டிருந்தார். மலையில் பாதி வரை படிவேலை நடந்தது. பாதி மலையில் பழைய நான்கு கால் மண்டபம் இருந்தது. அதைப் பெயர்க்க முயன்றனர். கொத்தனர்களில் இருவர் அடியில் உள்ள பழைய படிக் கல்லைப் பெயர்த்தார்கள். மட்டிப்பால் சாம்பிராணிப் புகை குபு குபு என்று உள்ளேயிருந்து வந்தது. அந்த இருவரும் வாயிலும் மூக்கிலும் உதிரம் வந்து மயங்கி விழுந்து விட்டார்கள்.

அருகில் இருந்த சிற்ருள்கள் ஓடோடியும் சென்று, வைத்தியபூபதி அப்பாதுரை அவர்களிடம் கூறினுர்கள். அவர் விரைந்து சென்று பார்த்தார். படியைப் பெயர்த்த இடத்தில், மலைக்குள் பார்த்தபோது, ஒரு முனிவர் உருவம் மங்கலாகத் தெரிந்தது. அப்பாதுரை கீழே விழுந்து வணங்கி, கன்னத்தில் அடித்துக் கொண்டு, அப்படியே படிக் கல்லை வைத்து மூடிவிட்டார்.

வள்ளிமலையில் எல்லாப் படிகளும் புதுமையாகப் போடப்பட்டன. இந்த இடத்தில் மட்டும் பழைய மண்டபம் அப்படியே விடப்பட்டுள்ளது. இதன் காரணம் பலருக்குத் தெரியாது. இந்த அரிய நிகழ்ச்சியைத் திரு வைத்திய பூபதி என்னிடம் கூறினுர். இன்றும் பல அதிசயங்கள் நிறைந்த தலம் இது.

மேலும், மலைமீது சுவாமி எழுந்தருளியிருப்பது குகைக் கோயில். குகையில் இருப்பதனுல் குகன் என்று கூறுவர். குகைக்கு மேல் ஸ்தூபி கட்டியுள்ளது. அன்றியும் மலையின் உச்சியில் சூரியன் காணுத சுனையுள்ளது. கடுங் கோடையிலும் நீர் வற்ருமல் சிவஞானிகள் உள்ளம்போல் தெளிந்து, கற்புடைய மாதர் உள்ளம்போல் குளிர்ந்து இருக்கும். இச்சுனையில்தான் முருகன் வள்ளியுடன் நீராடியது. இம் மலையில் வள்ளியின் பரணும் வள்ளிநாயகியின் கோயிலும் இருக்கின்றன. இன்றும் பல மாதவர்கள் தங்கித் தவம் புரிகிருர்கள். தவம் புரிவார்க்குத் தனிமை தரும் இனிமையான திருத்தலம் வள்ளிமலை.

ஆதலால் அறுமுகன் அடியார்கள் ஆயுளில் ஒரு முறையாவது வள்ளிமலை முருகனையும் வள்ளிநாயகியையும் தரிசிப்பது அவசியம். அவ்விதம் தரிசித்தோர் இம்மை நலன்களை எளிதில் பெறுவர்.

''வள்ளி படர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளி மணவாளப் பெருமாளே.''



தம்மிடம் பிறர் வைத்த நம்பிக்கையை நிறைவேற்றி, அளித்த வாக்கில் தவறிவிடாமல் நடப்பவர்களே முஸ்லிம்கள் ஆவார்கள்.

—**நபிகள் நாயகம்**

உண்மையான பேரொளியை ஒரு ஞானி நாடுவது போல நாமும் நாடக்கூடும். ஏனெனில் ஆத்மா என்பது ஒன்றுதானே?

—**எமர்சன்**

கோடிக்கணக்கான மானிடராகிய நாம், எங்கும் எப்போதும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தத் தொடங்குவோம். கலியை அழிப்போம். சத்தியத்தை நாட்டுவோம்.

—**சுப்பிரமணிய பாரதியார்**

எல்லோரையும் சமநோக்குடன் பார். அப்போது எல்லாம் தெரிந்தவனுன சர்வ வியாபியின் தன்மையை அடைவாய். ஆத்ம விசாரணை செய்து ஆத்மஞானம் வரப்பெருதவர்கள் சம்சார சாகரத்தைக் கடக்க விரும்புவது வீண்.

—**ஆதி சங்கரர்**

காமம், கோபம், பசி ஆகிய இந்த மூன்றும்தான் மனிதனை மிருகமாக மாற்றிவிடும் மகத்தான சக்திகளாகும். மனக் கட்டுப்பாடு இல்லாத மனிதன் தன் உடல்பலத்தைக் காட்டிக் கொள்ள நினைப்பது, அருவியின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் ஓட்டை வாளியைப் போன்றது.

—**ஓர் அறிஞர்**

புத்தர் சொன்ன கதை

பிரம்மசாரி முத்துக்குமார்

புத்தர்பெருமான் சொன்னதாகப் பல கதைகள் வழங்கி வருகின்றன. ஜாதகக் கதைகள் எனப்படும் இந்தக் கதைகளில் புத்தர் தம்முடைய முற்பிறவிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறார். அவற்றுள் ஒரு கதை இங்கே கொடுக்கப்படுகிறது.

வெகு காலத்திற்கு முன்பு காசியைப் பிரம்மதத்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனிடம் பல மூட நம்பிக்கைகள் இருந்தன. நல்ல சகுனங்களிலும் கெட்ட சகுனங்களிலும் அவனுக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்து வந்தது. அரசனின் இந்தப் பலவீனத்தை அரண்மனைப் பண்டிதர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். ஆகவே அவர்கள் அரசனைப் பல முறை ஏமாற்றித் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள்.

ஒரு நாள் அமாவாசை நள்ளிரவு நேரத்தில் அரசன் பிரம்மதத்தன் தன் படுக்கையறையில் தூங்கிக் கொண்டிருந்தான். ஒரே மயான அமைதி நிலவியது. அப்போது நள்ளிரவின் அமைதியைக் கலைக்கும் வகையில் ஒரு பறவையின் சோகமான அலறல் கேட்டது. அந்தச் சப்தத்தைக் கேட்டதும் அரசன் திடுக்கிட்டு எழுந்தான். ஜன்னலருகில் ஓடிப்போய் நின்று, பறவையின் அலறல் வந்த திசையைக் கூர்ந்து கவனித்தான். அரண்மனையைச் சேர்ந்த குளத்தின் அருகில் ஒரு கொக்கு அவலமாக அலறிக் கொண்டிருந்தது. 'ஆ! பறவையின் அலறல் அபசகுனம் அல்லவா? என்ன ஆபத்து வரப் போகிறதோ தெரியவில்லையே!' என்று அரசன் மிகவும் பயந்து போனான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு பறவையின் அலறல் மெதுவாக அடங்கியது. ஆனால் அரசன் பிரம்மதத்தனால் தான் நின்றிருந்த ஜன்னலை விட்டு நகரவே முடியவில்லை! அவனுடைய உள்ளத்தில் வீணான பல பயங்கர எண்ணங்கள் அலையலையாக எழுந்தன. அவன் மீண்டும் பழைய மனநிலைக்கு வருவதற்குள் மேலும் பல மிருகங்கள் துன்பம் தோய்ந்த குரலில் அலறும் ஒலி கேட்டது. அந்த அலறல், அன்று மாலை அரண்மனைப் பூந்தோட்டத்திலுள்ள கூண்டுகளில் பிடித்து அடைக்கப்பட்ட மான், குரங்கு முதலிய பல மிருகங்களின் சப்தங்கள் ஆகும். இந்த முறை, பல மிருகங்களின் அலறல்களைக் கேட்டதும் அரசன் பிரம்மதத்தனின் இதயமே நின்றுவிடும் போல இருந்தது. பயத்தால் அவனுடைய உடம்பு முழுவதும் வேர்த்துக் கொட்டியது. அவன் மயங்கி விழும் நிலையில் இருந்தான். தீய சக்திகள் தனக்கு எதிராகத் தோன்றியிருக்கக்கூடும் என்று நினைத்து அவன் பெரிதும் மனம் வருந்தினான்.

அந்த மனநிலையில் பிரம்மதத்தன் மெதுவாக வந்து, கட்டிலில் சாய்ந்துவிட்டான். பயங்கரமான பல எண்ணங்கள் அவனது உடலையும் உள்ளத்தையும் களைப்படையச் செய்தன. அப்படியே அவன் அன்றிரவு உறங்கினான்.

விடியற்காலையில் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த குயிலின் சோகக் குரல் கேட்டது. அதைக் கேட்டதும் அரசன் பிரம்மதத்தன் வழக்கத்திற்கு மாறாகச் சற்று முன்னதாகவே படுக்கையிலிருந்து எழுந்தான். நள்ளிரவிலும் விடியற்காலையிலும் கேட்ட பறவைகளின் அலறல் சப்தங்களால் அவன் பெரிதும் குழம்பிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் அமைச்சர்களையும் அரசவைப் பண்டிதர்களையும் உடனடியாக அவைக்கு வந்து கூடும்படி கட்டளையிட்டான். பிரம்மதத்தனும் அவசர அவசரமாகக் காலைக் கடன்களைக் முடித்துக்கொண்டு அவைக்கு விரைந்தான். அரசன் திடீரென்று சபையைக் கூட்டியதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள அனைவரும் பேராவலுடன் காத்திருந்தார்கள்.

துன்பம் தோய்ந்த முகத்துடன் பிரம்மதத்தன் அரசவைக்குள் நுழைந்தான். அவனுடைய தோற்றத்தைக் கண்டதும் சபையில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். அரசன், தான் கடந்த இரவில் கேட்ட அபசகுன ஒலிகளைப் பற்றி அவையோருக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி, அதற்கான காரணங்களைச் சொல்லும்படி அமைச்சர்களையும் பண்டிதர்களையும் கேட்டுக்கொண்டான்.

அரசனின் கேள்விக்கு உடனே பதில் சொல்ல எந்தப் பண்டிதரும் முன்வரவில்லை. அரசனுக்கு விளக்கம் சொல்வதற்கு முன்பு தாங்கள் அனைவரும் தனிமையில் கூடி, இந்த அபசகுனம் பற்றித் தங்களுக்குள்ளாகவே ஆலோசிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தனிமையில் ஓர் ஆலோசனை மண்டபத்தில் குழுமினார்கள்.

பண்டிதர்களுக்கும் அரசன் கேட்ட அபசகுன ஒலிகளுக்கான காரணம் தெரியவில்லை. என்றாலும் தங்களுடைய அறியாமையை அரசனிடம் காட்டிக்கொள்ளாமல், அரசனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தார்கள். அவர்களுள் முதியவராகிய ஒரு பிராம்மணர், ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அரசன் நம்முடைய கையில் இருக்கிறான். நமக்கு வேண்டிய தேவைகளை இப்போதே அரசனைப் பயன்படுத்தி நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அருமையான சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடக்கூடாது'' என்று கருத்துத் தெரிவித்தார்.

மற்றொரு பண்டிதர் எழுந்திருந்து, ''நாம் நீண்ட நாளாக ஒரு யாகம் நடத்த நினைத்திருந்தோம் அல்லவா? இந்தச் சந்தர்ப்பத்தை நாம் ஏன் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?'' என்று கேட்டார். அவருடைய யோசனையை எல்லாப் பண்டிதர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள்.

பண்டிதர்கள் அனைவரும் அரசனிடம் சென்றனர். அவர்களுள் மூத்த பண்டிதர் மிகவும் பணிவுடன் அரசனிடம், ''அரசே! தாங்கள் கடந்த இரவு கேட்ட அபசகுனங்களைப் பற்றி நாங்கள் அனைவரும் கலந்து ஆலோசித்தோம். அதைத் தங்களுக்குத் தெரிவிக்க என் மனம் பெரிதும் வேதனைப்படுகிறது. ஆனால் மாட்சிமை பொருந்திய தங்களது நன்மைக்காகவும், நமது நாட்டின் நன்மைக்காகவும் உண்மையை நான் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன்.

''தாங்கள் கேட்ட அபசகுனங்களின் கருத்து இதுதான்: அரசே! மிகப் பெரிய ஆபத்து வர இருக்கிறது. உள்நாட்டு எதிரிகள் வெளிநாட்டுப் பகைவர்களுடன் சேர்ந்து, நமது ஆட்சியைக் கைப்பற்றவும், தங்களைக் கொன்றுவிடவும் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பேராபத்திலிருந்து தங்களைக் காப்பாற்றத் தேவர்களால்தான் முடியும். ஓர் இலட்சம் ஆடுகளைத் தேவர்களுக்குப் பலியாகக் கொடுத்து உடனடியாக அவர்களை நாம் திருப்திசெய்ய வேண்டும். அதோடு யாகத்தின் போது பண்டிதர்கள் அனைவருக்கும் ஏராளமான தானதர்மங்களைத் தாங்கள் செய்ய வேண்டும். காலதாமதம் இல்லாமல் யாகத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள். அதன் மூலம் வர இருக்கும் ஆபத்தைத் தவிர்த்துவிடலாம்'' என்று மிகவும் நல்லவர் போலச் சொன்னார்.



அவரது கருத்தை ஆமோதித்து மற்றப் பண்டிதர்களும் அரசனுக்கு ஆலோசனைகளைச் சொன்னார்கள். மிருகங்களின் அலறல் சப்தங்களைக் கேட்டதனால் ஏற்கனவே பயந்திருந்த அரசன் பிரம்மதத்தன், பண்டிதர்களின் ஏமாற்றுப் பேச்சை உண்மை என்றே நம்பிவிட்டான்.

அரசன் தன் வீரர்களை அழைத்து, யாகத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யக் கட்டளை பிறப்பித்தான். வீரர்கள் உற்சாகத்துடன் யாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டார்கள். அவர்கள் நாடு முழுவதும் சுற்றி, ஆயிரக்கணக்கான ஆடுகளை யாகத்தில் பலியிடுவதற்காகக் கொண்டு வந்தார்கள். ஆடுகளைப் பலியிடக் கொடுக்க மறுத்த ஆட்டுக்குச் சொந்தமானவர்களை அரசாங்க அதிகாரிகள் கடுமையாகத் தண்டித்தனர்.

வீரர்கள் ஆடுகளைப் பலியிடும்பொருட்டு மந்தை மந்தையாக ஓட்டிக்கொண்டு வருவதை ஓர் அந்தணச் சிறுவன் பார்த்தான். அவனுக்கு ஆடுகளின் மேல் இரக்கம் உண்டாயிற்று. வாயில்லாத அந்தப் பிராணிகளை எப்படியாவது காப்பாற்றத் தீர்மானித்தான். அவனுக்

ருக் காசிக்கு வந்திருந்த போதிசத்துவரின் நினைவு வந்தது. (அந்தப் பிறவியில் புத்தர் போதிசத்துவராகப் பிறந்திருந்தார்.) அவர் இமயமலையில் நீண்டகாலம் தவம் செய்து விட்டு அப்போதுதான் காசியிலிருந்த நந்த வனம் ஒன்றுக்கு வந்து தங்கியிருந்தார்.

'யாகத்தில் பலியிட இருக்கும் இந்த ஆயிரக் கணக்கான ஆடுகளைப் போதிசத்துவரால் காப் பாற்ற முடியும்' என்று அந்தணச் சிறுவன் நம்பினான். மரணத்தின் பிடியில் சிக்கியிருந்த அந்தப் பரிதாபத்திற்கு உரிய பிராணிகளைக் காப்பாற்றும்படி போதிசத்துவரிடம் வேண்டிக் கொள்ளும் எண்ணம் அவனுக்குத் தோன்றி யது. உடனே அவன் அந்த மகான் தங்கி யிருந்த நந்தவனத்தை நோக்கி ஓடினான்.

அவன் நந்தவனத்தை அடைந்தபோது அவனுக்காகவே காத்திருந்தவர் போலப் போதிசத்துவர் ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந் திருந்தார். அவரைப் பார்க்கும் கொடிய மிருகங்கள்கூடத் தங்களின் கொடூரத் தன் மையை இழந்துவிடும். அவ்வளவு அன்பும் கருணையும் கொண்டவராகப் போதிசத்துவர் விளங்கினார். மாதவச் செல்வராகிய அவரு டைய முகம் அன்புமிக்க தாயை நினைவூட்டுவ தாக இருந்தது.

பையனைப் பார்த்ததும் போதிசத்துவர், ''குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்?'' என்று அன்பு பொங்க வினவினார்.

''அரசன் பிரம்மதத்தன் ஒரு யாகம் நடத்த இருக்கிறான். அதில் ஆயிரக்கணக்கான ஆடு களைப் பலியிடப் போகிறார்கள்'' என்று அந்த ணச் சிறுவன் எல்லா விவரங்களையும் போதி சத்துவருக்கு விளக்கமாக எடுத்துரைத்தான். அதோடு, எந்த விதத்திலாவது அந்த அப்பாவி ஆடுகளைக் காப்பாற்றும்படியும் போதிசத்து வரை வேண்டினான்.

பையன் சொன்ன துயரக் கதையைக் கவன மாகக் கேட்டுக்கொண்டிருந்த போதிசத்துவர் பத்மாசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்தார். கண் களை மூடிச் சிறிது நேரம் ஆழ்ந்து தியானித் தார். சற்றுநேரம் கழித்துப் போதிசத்துவர் தியானம் கலைந்து மெல்லக் கண் விழித்தார். எதிரில் நின்றிருந்த பையனிடம் அவர், ''குழந் தாய்! அரசன் பிரம்மதத்தனுக்குத் திகிலை உண்டாக்கிய மிருகங்களின் அலறல் ஒலிகள் இயல்பான ஒலிகளே ஆகும். அந்தச் சப்தங்கள் எழுந்ததற்கு இயற்கைக்குப் புறம்பான கார ணம் எதுவும் இல்லை. அரசன் பிரம்மதத்தன் வீணாக இப்படிப் பயந்திருக்க வேண்டியதே இல்லை'' என்று சொன்னார்.

போதிசத்துவர் சொன்னதைக் கேட்ட அந் தணச் சிறுவன், ''சுவாமி, கருணைகூர்ந்து தாங் களே அரசனிடம் வந்து, அதை சொன்னால் என்ன?'' என்று கேட்டான்.

அதற்குப் போதிசத்துவர், ''இல்லை குழந் தாய், நான் இந்த ஊருக்குப் புதியவன். அரண் மனைப் பண்டிதர்களைவிட என்னை நான் பெரிய புத்திசாலியாகக் காட்டிக்கொள்ள விரும்ப வில்லை'' என்று சொன்னார்.

பையனால் போதிசத்துவரிடம் வேறு ஒன்றும் தொடர்ந்து பேச முடியவில்லை. ஆனால், 'மகான் ஒருவரிடமிருந்து வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் மனிதகுலத்திற்கு நன்மை செய் யும் ஆற்றல் மகத்தான அளவில் உண்டு' என்று தன் முன்னோர் சொல்ல அவன் கேள்வி யுற்றிருக்கிறான். அது அவனுடைய நினைவுக்கு வந்தது. பையன் போதிசத்துவரை வணங்கி விட்டு, அவர் சொன்னவற்றை அரசனிடம் தெரிவிப்பதற்கு அரண்மனையை நோக்கி விரைந்து ஓடினான்.

அந்தணச் சிறுவன் அரசனை நேரில் சந்தித் தான். போதிசத்துவரிடமிருந்து தான் கேட் டதை அவன் அப்படியே பிரம்மதத்தனிடம் சொன்னான். பையன் தெரிவித்த போதிசத்து வரின் கருத்துக்களை வியப்போடும் பயபக்தி யோடும் பிரம்மதத்தன் கவனமாகக் கூர்ந்து கேட்டான். அரசனிடம் அறியாமையும் குழப் பங்களும் இருந்தபோதிலும், தெய்விகம் ததும் பும் சன்னியாசி ஒருவரின் கருத்துக்குச் செவி சாய்க்கும் போதிய ஞானமும் அவனிடம் இருக் கவே செய்தது.

உடனே பிரம்மதத்தன் ஞானமே வடி வெடுத்த போதிசத்துவரை நேரில் சென்று பார்க்கவும், அவரிடம் தன் மனக் குழப்பங்களைச் சொல்லிப் பரிகாரம் தேடவும் விரும்பினான்.

போதிசத்துவர் தங்கியிருந்த நந்தவனத் திற்கு அரசன் விரைந்து சென்றான்; அவர் முன்னால் பயபக்தியுடன் வணங்கி நின்றான்.

பிரம்மதத்தன், ''நள்ளிரவில் நான் கேட்ட மிருகங்களின் சோகமயமான அலறலுக்கு என்ன பொருள்?'' என்று போதிசத்துவரைப் பதற்றத்துடன் வினவினன்.

அரசனைப் பார்த்துப் போதிசத்துவர் புன்முறுவல் பூத்தார். பிறகு அவனை நோக்கிக் கருணை ததும்ப, உண்மைநிலையை விளக்கினர் —''அரசே! நாட்டு மக்களை நல்வழி நடத்த வேண்டிய நீ, அர்த்தமில்லாத மனக் குழப்பங்களுக்கு இடம் தரலாமா? அன்றைய இரவு நீ கேட்ட அவலச் சப்தங்கள் மிருகங்களின் இயல்பான சப்தங்களே ஆகும். இயற்கைக்குப் புறம்பான அறிகுறியோ, அபசகுனமோ அந்த அலறல் சப்தங்களில் இல்லை. நீ உன் நாட்டில் வாழும் மக்களின் நன்மையில் போதிய கவனமில்லாமல் இருக்கிறாய். அதோடு, மற்ற உயிரினங்களுக்கும் உன் நாட்டில் போதுமான பாதுகாப்பு இல்லாமலிருக்கிறது.

''நாட்டிலுள்ள நீர்நிலைகள் எல்லாம் வறண்டுவிட்டன. அன்றிரவு பசியுடன் இருந்த ஒரு கொக்கு அலறிய சப்தத்தையே நீ கேட்டிருக்கிறாய். அதற்கு வேண்டிய உணவோ நீரோ பல நாட்களாகக் கிடைக்காததனால் தாங்க முடியாத பசிதாகத்தால் அந்தக் கொக்கு அலறியது. இனிமையாகப் பாடிச் சுதந்திரமாக வானில் பறக்கும் குயில்களையும், காட்டில் இன்பமாகத் துள்ளிக் குதிக்கும் மான்களையும் உன் நந்தவனத்திலுள்ள கூண்டுகளில், கைதிகளை அடைத்து வைத்திருப்பது போல அடைத்து வைத்திருக்கிறாய். இந்த மிருகங்கள் எல்லாம் உன்னுடைய சிறிய கூண்டுகளுக்குள் எவ்வளவு கஷ்டத்துடன் இருந்துகொண்டிருக்கின்றன என்பது உனக்குப் புரியவில்லையா? அவை கூண்டிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வெளியில் போக ஆவலுடன் இருக்கின்றன. சுதந்திரமாக வாழும் விருப்பத்துடன் அவை தேம்பி அழுகின்றன. அந்த மிருகங்கள் சுதந்திரம் கேட்டு அழுத சத்தத்தையே நீ அன்றைய இரவில் இரண்டாவது முறையாகக் கேட்டிருக்கிறாய்.''

இவ்விதம் போதிசத்துவர் அருளிய விளக்கத்தைக் கேட்டு, உண்மையை உணர்ந்த அரசன் தன் பிழைகளுக்காக மிகவும் மனம் வருந்தினன்.

வெட்கத்தால் தலைகுனிந்து நின்ற பிரம்மதத்தனிடம் போதிசத்துவர் மேலும் தொடர்ந்து சொன்னர்—''அரசனே, நீ உன் நந்தவனத்தில் கூண்டில் அடைத்து வைத்திருக்கும் மிருகங்களை விடுதலை செய். எல்லா உயிர்களிடமும் அன்பாக இரு. நாட்டு மக்களின் நன்மையில் மேலும் போதிய அக்கறைகொள். நாட்டைத் தர்மவழியில் ஆட்சி செய். தர்மத்தைக் கடைப்பிடிப்பதனுல் உனக்கும் உன் நாட்டு மக்களுக்கும் மேலான எல்லா நன்மைகளும் வந்து சேரும்'' என்று அறிவுரைகளை வழங்கினர்.

அரசன் பிரம்மதத்தன் மாதவச் செல்வராகிய போதிசத்துவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினன். அவருடைய ஆசிபெற்று அரண்மனை திரும்பினன். மன்னனின் கட்டளைப்படி அரண்மனை வீரர்கள், யாகத்திற்குப் பலியிட இருந்த ஆடுகளை எல்லாம் விடுதலை செய்தனர். அரண்மனை நந்தவனத்தில் கூண்டுகளில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்த பறவைகளும் மிருகங்களும் விடுதலை செய்யப்பட்டன.

அரசன் பிரம்மதத்தன் தயாளமூர்த்தியாகிய போதிசத்துவரின் அறிவுரையின்படி நாட்டைத் தர்மவழியில் நின்று பரிபாலித்து வந்தான்.

சான்றோர்கள் பிழையைத்தான் வெறுப்பார்கள்; பிழை செய்தவனை வெறுக்க மாட்டார்கள்.

—**ஷிண்டோ மதம்**

தேவா, நாங்கள் புகழ் நிறைந்து வாழ வேண்டும். எங்களுக்குக் கிடைக்கும் மதிப்பு மரியாதைகளுக்கெல்லாம் அடிப்படையில் புனிதம் நிலவ வேண்டும். நல்ல செயல்களின் மூலம் கிடைத்த ஆத்மபலத்தினுல் எங்கள் ஜீவசக்தி வளர வேண்டும். இவற்றின் பயனுக எங்களுடைய வாழ்க்கை, ஒளி படைத்த திசைகளைப் போலப் பரந்து விரிந்து ஒளிவீசித் திகழட்டும்.

—**அதர்வ வேதம்**

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

தமிழாக்கம் : ' அண்ணு ' சுப்ரமண்யம்

சுவாமி பிரேமானந்தர் எழுதிய கடிதங்களிலிருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கு இடம் பெறு கின்றன.

ஒரு துறவிக்குக் கூறியது: அனைவருடனும் அன் பாகவும் ஒற்றுமையாகவும் வாழ முயற்சிசெய். இலட்சியத்திற்கு விளக்கமான வகையில் வாழ வேண்டும். உன் உள்ளம் அன்பினுல் விரிந்து அனைவரையும் தழுவட்டும். அன்பைவிட உயர்ந்தது வேறு எதுவும் இல்லை. உன் வாழ்க் கையைப் பார்த்து உலகம் அமைதியையும் ஆனந்தத்தையும் அடையட்டும். அற்பமான சுயநல எண்ணம் எதுவும் உனக்குள் நுழைய லாகாது.



சுவாமி பிரேமானந்தர்

இரண்டு வகையான விவசாயிகளைப் பற்றிய கதை உனக்கு ஞாபகமிருக்கிறதா? பொழுது போக்காக விவசாயம் செய்பவர்கள் ஒருவகை; பயிர்த்தொழிலை எந்த நிலையிலும் கைவிடாமல் உழைப்பவர்களும் பரம்பரையாக விவசாயம் செய்பவர்களும் இன்னொரு வகை. உண்மை யான பக்தன் பரம்பரை விவசாயியைப் போன் றவன். அவன் எந்த நிலையிலும் மனம் சோர் வடைந்து தெய்வ வழிபாட்டை விட்டுவிடுவ தில்லை. சில சமயம் மனம் சலனமடைவதைக் கண்டு அவன் தியானம் பழகுவதை விட்டு விடுவதில்லை. அவன் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைமைகளிலும், இன்பத்திலும் துன் பத்திலும், நோயுற்ற போதும் நோயற்ற போதும், அமைதியிலும் குழப்பத்திலும் இறை வனை இறுகப் பிடித்துக்கொண்டிருப்பான்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ''மானிட குருவானவர் மந்திர உபதேசத்தைச் சீடனுடைய காதின் வழியே செலுத்துவார்; உலக குரு மந்திரத்தை அவனுடைய உள்ளத்தில், அந்தராத்மாவில் நேராக விளங்கச் செய்வார்'' என்று சொல்வது வழக்கம். உலககுருவான பகவானை நீ விடா மல் பற்றிக்கொண்டால், அவர் உனக்கு நல்ல புத்தியையும் அன்பையும் அவருடைய பாத கமலத்தினின்று வழுவாத பக்தியையும் தாமே அளிப்பார். பகவானை மறக்காமல் இருப்பவ னுக்கு ஒரு குறையும் ஏற்படாது.

நீ பகவானுடைய குழந்தை என்றும், அவ ருக்குப் பணிபுரிவதே உன் வேலை என்றும் எப் போதும் நினைத்துக்கொண்டிரு. அதற்குத் தக்கபடி நட. உன் உள்ளத்தில் பொருமையோ வெறுப்போ பகைமையோ ஒருபோதும் நுழைய வேண்டாம். சகிப்புத்தன்மையும் பொறுமையும் வாழ்க்கையில் நமக்கு வழி காட்டிகளாக இருக்க வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கை இந்தப் பொறுமைக்குத் தலைசிறந்த உதாரணம். ''எவன் பொறுத்துக்கொள்கிருனே, சகித்துக் கொள்கிருனே, அவன்தான் வாழத் தெரிந் தவன். பொறுமை இல்லாதவன் அழிந்து போவான். மக்களே! பொறுமையைக் கைக் கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நீங்களும் அழிந்து போவீர்கள்'' என்று இராமகிருஷ்ணர் கூறுவார். இந்த உண்மையைக் கற்றுக்கொள் ளத்தான் நாம் இராமகிருஷ்ணரிடம் வந்திருக் கிருேம்.

பல உருவங்களில் உங்கள் முன்பு நடமாடும் பகவானைப் பாருங்கள்; வேறு எங்கே அவரைக் காண முடியும்? அவரை எல்லா உயிர்களிலும் நேசித்துச் சேவை செய்யுங்கள். அதனுல் பகவானைப் பூசித்துச் சேவை செய்தவர்கள் ஆவீர்கள்.

எல்லா ஜீவர்களையும் நாராயணன் என்று கருதிச் சேவை செய்வதற்காகவே நாம் பிறந் திருக்கிருேம். இதுதான் நமது சாதனை. மனி தர்கள் நல்லவர்களா கெட்டவர்களா என்று ஆராய்ந்துகொண்டிருப்பதற்கு நேரமில்லை. அத்தகைய ஆராய்ச்சி நமது தருமத்திற்கும் பொருந்தாது.

ஏழைகளையும் எளியவர்களையும் பாமரர்களையும் பதிதர்களையும் நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். ஏழைகளை நேசிப்பதனால், பணக்காரர்களையும் பாக்கியசாலிகளையும் வெறுக்க வேண்டும் என்பதில்லை.

''நமக்குப் பிரியமான பகவான், பிரம்மா முதல் புழு வரை அணு வரை எல்லா உயிர்களிலும் எல்லா இடங்களிலும் உறைகிறார்'' என்று சுவாமிஜி (விவேகானந்தர்) கூறியுள்ளதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அன்புடனும் ஒற்றுமையுடனும் அனைவருடனும் வாழ நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இது தான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமிஜி ஆகிய இருவருடைய உபதேசமும் ஆகும்.

ஆசிரமம் நன்றாக வேரூன்றும் வரையில் நீ அங்கே இருக்க விரும்புகிறாய். அது மிகவும் நல்லது. விடாமுயற்சி இல்லாமல் ஆன்மிக வாழ்க்கையில் ஒருவரும் முன்னேற முடியாது; நாட்டுக்கும் நன்மை செய்ய முடியாது. எது என் நாடு? 'மூவுலகும்' என்னுடைய நாடு. இந்தியா மட்டும் என் நாடன்று. உலகம் முழுவதும் நம்முடையது என்பதை நாம் உணர வேண்டும். மனிதகுலம் முழுவதற்காகவும் நாம் ஆண்டவனிடம் பிரார்த்திக்க வேண்டும்.

குறுகிய 'நான்', 'என்னுடையது' என்ற மதிமயக்கம்தான் அஞ்ஞானத்தின் வேர். இந்தக் குறுகிய அகங்காரப் பற்றை ஒழித்து விடு. ''ஆண்டவனே! இந்த உலகம் உன்னுடையது. நீ இதற்கு அதிகாரி. நான் உன் வேலைக்காரர்களுள் ஒருவன்.''

பேச்சில் மட்டும் இல்லாமல் செயலிலும் பரந்த உள்ளம் படைத்தவனாக இருக்கக் கற்றுக்கொள். அதே சமயத்தில், ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதையில் வரும் கிணறு வெட்டுபவனைப் போல, நாம் ஒரே இடத்தில் ஆழ வெட்டுவதைத் தொடர வேண்டும்.

ஆசிரமத்தை நிறுவுவதற்காக நீ செய்யும் முயற்சி வெற்றியடைய வேண்டும் என்பது தான் என் பிரார்த்தனை. அரைகுறையாக எதையும் விடுவது நல்லதல்ல. எதற்கும் பயப்படாதே. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் உன் முழு மனதுடன் பிரார்த்தனை செய். அவர் தம்முடைய அளவுகடந்த கருணையால் உனக்குப் பக்தியையும் வலிமையையும் தைரியத்தையும் கொடுப்பார்.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு நீ நன்றாகத் தியானமும் ஜபமும் செய்யலாம். தியானத்திற்கும் நாமஜபத்திற்கும் இடத்தைப் பற்றியும் காலத்தைப் பற்றியும் கட்டுப்பாடு எதுவுமில்லை. இஷ்டதெய்வத்தை எல்லா நிலைகளிலும் நினைவில் நிறுத்துவதுதான் நாம் செய்ய வேண்டிய கடமை. கடவுளின் கிருபையால் நீ ஸித்த மந்திரங்களைத் தூய அன்னையாரிடமிருந்து பெற்றிருக்கிறாய் என்பதை எப்போதும் மறவாதே. இதை எந்தக் காலத்திலும் நம்பு. நீ எப்படி அடிதவற இயலும்? பகவத்கிருபையால் நீ எப்போதுமே நேரான வழிதான் நடப்பாய். ''நான் தூய அன்னையாரின் அருளைப் பெற்றவன். நான் எப்படித் தவறு செய்ய முடியும்?''

நீங்கள் தூய்மையானவர்கள், நீங்கள் பகவானுடைய பணியாட்கள், பக்தர்கள் என்ற திடநம்பிக்கை உங்களை விட்டு விலகாமல் இருக்கட்டும். உலக மக்கள் அனைவரும் உங்களுக்குச் சொந்தம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். உனக்கு அன்னியனும் பகைவனும் தீயவனும் எவனுமில்லை. நீ இராமகிருஷ்ணரிடம் சரண் புகுந்திருக்கிறாய். ஆகையால், உலகில் அச்சமில்லாமல் உலவி வரலாம். பக்தன் எங்கே இருந்தாலும் பகவானுடைய முன்னிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறான்.

கவர்னர் ஜெனரலுடைய கூற்றால் ஆசிரமத்திற்கு என்ன தீங்கு நேர முடியும்? ஆசிரமத்தில் உள்ளூற ஒரு குறையுமில்லையென்றால், உனக்கு அச்சமும் கவலையும் எதற்காக? தூய்மையான சுயநலமற்ற பணியை யாராலுமே கெடுத்துவிட முடியாது. தூய உடலுடனும் தூய மனதுடனும் மேலே செல்லுவோம். உண்மையைக் கடைப்பிடிப்போம். நம்மை யார் தடுக்க முடியும்? நம்முடைய ஒரே இலட்சியம் பகவத்பக்தி என்பதை நினைவில் வைத்துக்கொள். இந்த மார்க்கத்தில் நமக்குப் பகவானே வழிகாட்டி என்பதையும் நம்பு. நான் இடைவிடாமல் பிரார்த்திப்பது, 'ஸ்ரீராமகிருஷ்ணர் உனக்குப் பலத்தையும் பொறுமையையும் தைரியத்தையும் கொடுத்தருள வேண்டும்' என்பதே ஆகும்.

துளசிதாசர் காணும் இராமபிரான்

சுவாமி ஆத்மானந்தர்

உய்விக்க வேண்டும் என்று இறைவன் நினைத்தால் மட்டுமே எதுவும் கடைத்தேற முடியும். இல்லாவிட்டால் எந்தப் பொருளும் கீழே போக வேண்டியதுதான்.

ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியை இராவணனிடமிருந்து மீட்டுவர வானரங்களின் உதவியோடு சேதுவில் அணை கட்டிக்கொண்டிருந்த சமயம் அது.

தங்கள் அரசனாகிய சுக்கிரீவனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, நான்கு திசைகளிலிருந்தும் குரங்குகளும் கரடிகளும் வந்து குழுமின. அவை புண்ணிய பாரதத்தின் தென்கோடிக் கடற்கரையில் குழுமியிருந்த காட்சியே மற்றொரு கடலைப் போலக் காணப்பட்டது.

அணை கட்டுவதற்காக எல்லா வானரவீரர்களும் நாலாபுறங்களிலும் சென்று பெரிய பெரிய கற்களைத் தூக்கி வந்து 'ஸ்ரீராம்' என்று உச்சரித்துவிட்டுக் கடலில் வீசினர். அந்தக் கற்கள் தண்ணீரில் மூழ்காமல் மிதந்தன. அவற்றை வரிசை வரிசையாக வைத்து நளன், நீலன் என்ற இரண்டு வானரவீரர்களும் பாலம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேலை மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது.

'ஸ்ரீராம்' என்று உச்சரித்துக் கடலில் வானரவீரர்கள் வீசும் கற்கள், நீருள் மூழ்காமல் மிதப்பதை மிகவும் அதிசயத்துடன் ஸ்ரீராமர் பார்த்தார். அவருக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் வந்தது. ஆழ்ந்து சிந்தித்தார்: 'இது என்ன புதுமை! என் பெயரைச் சொல்லிப் போடப்படும் கற்கள் இவ்வளவு அழகாகத் தண்ணீரில் மிதக்கின்றனவே! இது எப்படி? சிறுவயதில் மற்றச் சிறுவர்களோடு விளையாடியபோது, நானும் அவர்களோடு பலமுறை கற்களைக் குளங்களிலும், மழைத் தண்ணீர் தங்கிய குட்டைகளிலும் எறிந்து விளையாடியிருக்கிறேன். அப்போதெல்லாம் நாங்கள் எறிந்த கற்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கின்றனவே தவிர மிதந்தது கிடையாதே! இன்று எனது பெயரைச் சொல்லிப் போடப்படும் கற்கள் மிதப்பது எப்படி? இந்தச் சில வருடங்களில் எனக்கே தெரியாமல் நான் ஏதாவது அற்புதச் சக்தியைப் பெற்றிருக்கிறேனா? ஒருவேளை நான் கற்களைத் தண்ணீரில் வீசியெறிந்திருந்தால் அவை மிதக்கும் அதிசயத்தை முன்பே கண்டிருப்பேனோ என்னவோ! பரவாயில்லை. இப்போது நான் ஒரு கல்லைத் தண்ணீருக்குள் எறிந்து அது மிதப்பதைப் பார்க்கிறேன்' என்று ஸ்ரீராமபிரான் நினைத்துக் கொண்டார்.

சோதனை செய்து பார்க்க நினைத்த ஸ்ரீராமருக்குத் திடீரென்று மற்றொரு சந்தேகமும் எழுந்தது: 'நான் இப்பொழுது எறியும் கல் ஒருவேளை நீரின்மேல் மிதக்காமல் மூழ்கிவிட்டால், அதைக் காணும் இந்த வானரவீரர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? தம்பி இலட்சுமணன் என்ன நினைப்பான்? அவர்களுக்கு என்மேல் உள்ள நம்பிக்கை போய்விடும் அல்லவா? நல்லது. யாரும் பார்க்காத வகையில் தனியாகச் சென்று நான் எறியும் கல் என்னதான் ஆகிறது என்று பார்க்கிறேன்' என்று ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

அனைவரும் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். தம்பி இலட்சுமணனும் மிகவும் மகிழ்ச்சியுடன் தன்னை மறந்து வேலைகள் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.



இதுதான் சமயம் என்று ஸ்ரீராமர், அடர்ந்த கானகத்துக்குள் மெல்ல மெல்லச் சென்று

மறைந்து நடந்தார். ஒருவரும் தம்மைக் கவனித்துவிடக் கூடாது என்பதற்காகத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி விரைவாக வெகுதூரம் வந்துவிட்டார்.

வானரங்களுக்கோ இலட்சுமணனுக்கோ ஸ்ரீராமர் என்ன நினைத்தார், என்ன செய்கிறார் என்பது தெரியாது. அவர்கள் அனைவரும் மிகவும் மும்முரமாகப் பாலம் அமைப்பதில் கவனமாக இருந்தனர்.

ஸ்ரீராமர் ஓரிடத்தில் நின்று, தம்மை யாரும் தொடரவில்லை என்பதைச் சுற்றுமுற்றும் பார்த்து நிச்சயித்துக்கொண்டார். பிறகு ஒரு கல்லை எடுத்துக் கடலில் வீசினார். அந்தோ! கல் வழக்கம் போல் நீருள் மூழ்கிவிட்டது! ஸ்ரீராமருக்கு அதிர்ச்சி ஒரு புறம். மறு புறம் தம்மை ஒருவரும் நல்ல வேளையாகக் கவனிக்கவில்லையே என்ற திருப்தியுடன் திரும்பிப் பார்த்தார். ஆனால் அந்தத் திருப்தியும் நீடிக்கவில்லை! கூப்பிய கரங்களுடன் ஆஞ்சனேயர் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். என்ன ஏமாற்றம்! வெட்கத்துடன் ஆஞ்சனேயரிடம் பேசினார் ஸ்ரீராமர்.

ஸ்ரீராமர்: குழந்தாய்! நீ எப்போது வந்தாய்?

ஆஞ்சனேயர்: சுவாமி! யாருக்கும் தெரியாமல் ஒளிந்துகொண்டே தாங்கள் இந்தக் கானகத்துள் செல்வதைப் பார்த்து, நானும் தாங்கள் அறியாவண்ணம் தங்களைத் தொடர்ந்து வந்தேன்.

ஸ்ரீராமர்: (ஏமாற்றத்தால் சிறிது கடுகடுப்புடன்) அப்படியானால், நான் தனிமையில் வர விரும்பியதை நீ அறிந்தும் என்னை ஏன் தொடர்ந்து வந்தாய்? உன்னை யாரும் அவ்விதம் என் பின்னால் தொடர்ந்து வரச் சொல்லவில்லை. நானும் உன்னைக் கூப்பிடவில்லை. பிறகு ஏன் வந்தாய்?

ஆஞ்சனேயர்: (கண்கலங்கியபடி) அண்ணலே! என் உயிர்ப் பிரபுவே! இந்த அடர்ந்த கானகத்தில் தனியாகச் செல்லும் தங்களுக்கு அரக்கர்களால் ஏதாவது ஆபத்து வரலாம் என்று பயந்து, தங்களுக்கு உதவி செய்வதற்காகவே தங்களின் தனிமையைக் கலைக்காமல் மறைவாகத் தொடர்ந்து வந்தேன். என்னை மன்னியுங்கள்.

ஸ்ரீராமர்: (ஆஞ்சனேயரின் முதுகைத் தடவிப் புன்முறுவலுடன்) போகட்டும் மாருதி! எனக்கு உன்மீது கோபம் இல்லை. உண்மையைச் சொல். நான் இப்போது என்ன செய்தேன் என்பதை நீ பார்த்தாயா?

ஆஞ்சனேயர்: ஆமாம் பிரபுவே, நன்றாகப் பார்த்தேன்.

ஸ்ரீராமர்: (திடுக்கிட்டு) என்ன பார்த்தாய்? நான் என்ன செய்தேன்? சீக்கிரம் சொல்.

ஆஞ்சனேயர்: (கைகூப்பியபடி) அண்ணலே! சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு, ஒரு கல்லை எடுத்துக் கடலில் வீசி எறிந்தீர்கள். அது ஏன் என்று எவ்வளவு யோசித்தும் எனக்கு விளங்கவில்லை. தயவுசெய்து அதன் பொருளை எனக்கு விளக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீராமர்: குழந்தாய்! என் போதாத காலம் போலும்! யாருக்கும் தெரியாமல் செய்ய வேண்டுமென்று நினைத்து நான் செய்த காரியத்தை நீ பார்த்துவிட்டாய். அதன் காரணத்தை உனக்குச் சொல்கிறேன். ஆனால் எனக்கு இருக்கும் ஒரு சந்தேகத்தை நீதான் போக்க வேண்டும். சரியா?

ஆஞ்சனேயர்: பெருமானே! சொல்லுங்கள். தங்கள் அருளாலேயே தீர்க்கிறேன்.

ஸ்ரீராமர்: அணை கட்டிக் கொண்டிருக்கும் நீங்கள் அனைவரும் 'ராம்' 'ராம்' என்று சொல்லிக் கடலில் வீசியெறியும் பாறைகளெல்லாம் மிதக்கின்றன அல்லவா? அதைப் பார்த்ததும் எனக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. அதாவது, நானும் கற்களை நீரில் போட்டு அவை மிதக்கும் விந்தையைக் காண விரும்பினேன். ஒரு சமயம் அது மிதக்காமற் போனால், நீங்கள் அனைவரும், என் தம்பி இலட்சுமணனும்கூட என்னைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? இதைச் சோதித்துப் பார்க்கவே தனியாக யார் கண்ணிலும் படாமல் இங்கே வந்தேன். நான் இப்போது நீரில் எறிந்த கல்லும் மூழ்கிவிட்டது! எனது போதாத காலம், நீயும் அதைப் பார்த்துவிட்டாய்! தயவுசெய்து இதை யாரிடமும் சொல்லாதே! அது சரி, நான் எறிந்த கல் மூழ்கியது; எனது பெயரை உச்சரித்துப் போடப்பட்ட கற்கள் நீருக்குள் மூழ்காமல் மிதக்கின்றனவே? எப்படி? இதுவே என் சந்தேகம்.

ஆஞ்சநேயர்: (ஸ்ரீராமனின் திருவடித் தாமரைகளை வணங்கி எழுந்து, கைகளைக் கூப்பி, கண்களில் நீர் வழிய) ஐயனே! அசையும் பொருள்களாகவும், அசையாப் பொருள்களாகவும் பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமே தங்களின் கருணையை நம்பியுள்ளன. தாங்கள் வேறு; தங்களின் திருநாமம் வேறு என்பதில்லை. இரண்டும் ஒன்றுதான். தங்களின் திருவடிகளை மனதில் பதித்து, வாயால் தங்கள் திருநாமத்தைப் பக்தியோடு உச்சரித்துத் தூக்கிப் போடும் கற்கள் யாவும் மிதப்பதற்குக் காரணம் தங்கள் கருணையே அல்லவா? இதில் மந்திரமோ மாயமோ கிடையாது. அல்லது இந்தப் பாறைகளுக்குத் தனிப்பட்ட அற்புதச் சக்தியும் எதுவும் இல்லை. வானரவீரர்களின் சாமர்த்தியமோகூட இல்லை. ரகுகுலதிலகம் ஸ்ரீராமபிரானின் அருளால்தான் இந்த அற்புதம் நடக்கிறது. கடலில் அணைகட்ட முடிகிறது. பாறைகள் கடலில் மிதக்கின்றன. ஆனால் சற்று நேரத்திற்கு முன்பு தாங்களே வேண்டாம் என்பது போல, தங்களது கையில் எடுத்த கல்லைத் தூக்கி வீசி எறிந்துவிட்டீர்கள். தாங்களே வேண்டாம் என்று ஸங்கல்பித்தால் பிறகு அந்தக் கல்லை வேறு யாரால் மிதக்க வைக்க முடியும்? உய்விக்க வேண்டும் என்று தாங்கள் நினைத்தால் மட்டுமே எதுவும் கடைத்தேற முடியும். இல்லாவிட்டால் எந்தப் பொருளுமே கீழே போக வேண்டியதுதான். அதற்கு உய்வில்லை. ஆகையால் அண்ணலே! என் பிரபுவே! கருணைக்கடலே! அனைவரையும் காப்பாற்றுவீர்!

ஆஞ்சநேயரின் பதிலைக் கேட்ட ஸ்ரீராமபிரான் புன்னகை பூத்தார்.*

---

* சுவாமி ஆத்மானந்தர், மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நிகழ்த்திய தொடர்ச் சொற்பொழிவிலிருந்து ஜயம் என்னும் ஓர் அன்பர் எழுதியது.



அறிவை அடைந்து அதன்படி வாழாதவன், நிலத்தை நன்றாக உழுதும் விதைக்காதவனைப் போன்றவன்.

—சூபி சாதி

இறைவா! நீ என் தீய செயலுக்காக எனக்குத் தண்டனை அளிப்பாயானால், உனக்கும் எனக்கும் என்ன வேற்றுமை? சொல், பார்ப்போம்!

—உமர் கையாம்

மனிதன் செய்பவற்றுளெல்லாம் மிகுந்த அழகுடையது எது? பிறர் தீங்கு செய்தால் அவரை மன்னித்துவிடுவதுதான்.


—எபிரேய மதம்

இச்சை இருக்கும் வரையில் உண்மையான சந்தோஷம் வராது. யாராலும் அடக்க முடியாத மனதை ஆசை அடக்கிவிடுகிறது. தான் உயர்ந்த நிலைக்குப் போக வேண்டும் என்று நினைப்பவன், முதலில் பேராசையை விடவேண்டும். ஆசையற்ற நிலையே தீவிர வைராக்கியம் எனப்படும்.

—ஞான வாசிட்டம்

தங்கக் கட்டாரியைப் பெற்று யாரும் வயிற்றில் குத்திக்கொள்ள மாட்டார்கள். மனம் எவ்வளவு விரும்பினாலும் அநியாயத்தினாலும் தகாத வழியினாலும் செல்வத்தைத் தேடாதே! கட்டாரி கட்டாரியே; அநியாயம் அநியாயமே! அதனால் பெறும் செல்வத்தினால் நல்ல பலன் விளைவதில்லை.

—கவி விருந்தா



சரணாகதி

ஆர். ரங்காச்சாரி

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டு மக்களுக்கு யதிராஜராகிய ஸ்ரீராமானுஜரைத் தரிசிக்கும் பேறு விளைந்தது. அப்பெருமான் தூய அருளின் உருவினன். கருணைக் கடல் (தயைக ஸிந்து) பெருகும் அவருடைய அருள் வெள்ளத்தில் பட்டு எண்ணற்ற மக்கள் தூய்மை அடைந்தார்கள். ஸ்ரீராமானுஜரின் காலத்திலேயே அவரை இறைவனின் அவதாரமாகக் கொண்டு 'எம்பெருமானார்' என்று பக்தர் குலம் போற்றியது.

என்றாலும் அவருக்கு உள்ளுணர்விலே தமக்கு ஒரு தகுதியின்மை இருப்பது போல் முதலில் தோன்றியிருக்கும்! சில சமயம், தம்முடைய நெடுநாள் வாழ்க்கையில் கிட்டிய எழுச்சியையும் வீழ்ச்சியையும் நினைத்து, 'ஆ! பல பிறவிகளில் செய்வன செய்யாமலும் அல்லவை புரிந்தும் எத்துணைப் பாவச்சுமை ஏற்றியுள்ளேன்! இனி என் நிலை என்னாகும்?' என்ற ஏக்கம் அவருக்கு இருந்தது போலும்!

ஒரு நாள் அவர் தாம் பிறந்த ஸ்ரீபெரும்பூதூருக்கு அருகிலுள்ள மாமல்லபுரக் கடற்கரையில் நடந்து சென்றபோது, அலைகளின் ஓசையை அழுத்துவதைப் போல ஒரு பெருங்குரல் தெளிவாய் அவருடைய செவியில் பாய்ந்தது:

'நான் உன்னைச் சார்ந்தவன்' என்று சொல்லி ஒரே ஒரு சமயம் என்னை நாடுபவனை, 'எதற்கும் எப்போதும் அஞ்சேல்' என்று அறுதியிட்டுப் புகல் அளிப்பேன். இது நான் கொண்ட விரதம்.*

இதைக் கேட்டதும், 'ஆ! இது இராமன் அன்று கடற்கரையில் திருவாய்மலர்ந்த உரையன்றோ!' என்று நினைத்த இராமானுஜருக்குச் சற்று மனத்திண்மை உண்டாகியது. வேங்கடம் நோக்கிப் பயணமானார். காடும் பாலையும் கடந்து சென்றார். அப்போது இடியென ஒரு முழக்கம் அவருடைய செவிப்புலனைத் தாக்கியது:

''பல வழிகளை நாடுவது ஏன்? என்னிடமே புகல் அடை. எல்லாப் பாவங்களையும் அகற்றிடுவேன். இனித் துயரம் வேண்டாம்.''

'ஆ! இது போர்க்களத்திலே கண்ணன், அர்ஜுனனை நோக்கி மாந்தருக்கெல்லாம் பறைசாற்றிய மொழியன்றோ?' என்று நினைத்த இராமானுஜரின் உள்ளம் தழைத்தது.

தயங்கித் தயங்கி வேங்கடமலை மீது படிப்படியாய் ஏறினார். காற்றினிலே வந்தது ஒரு கீதம்: ''என்னை நம்பு. நான் இதுவரையிலும் என் சொல்லைக் காப்பாற்றியுள்ளேன். இனியும் பிறழ மாட்டேன்.'' இதைக் கேட்ட இராமானுஜருக்கு, 'இந்த வாசகம் அன்று இராமன் சுக்கிரீவனுக்குக் கூறியதாயிற்றே!', என்ற நினைவு வந்தது. மேலும் அவர், இராமன் கைகேயியைப் பார்த்துக் கொதித்து மொழிந்த, ''நான் இரு சொல் மொழிபவன் அல்லன்'' என்பதையும் நினைவுபடுத்திக்கொண்டார். இப்போது இராமானுஜருக்கு முழு நம்பிக்கையும் வந்தது. தெளிந்த உள்ளத்தோடு ஏழுமலையானைக் கண்குளிரக் கண்டார்.

சில நாள் கழித்துத் திருவரங்கம் நோக்கி நடந்து ஒரு பங்குனி உத்தரப் புண்ணியநாளில் கோயில் புகுந்தார்.

திருவரங்கனும் நாயகியும் இணையாய் ஓர் ஆசனத்தில் அமர்ந்து, தூயோன் இராமானுஜனைக் கருணையுடன் நோக்கினர். உடனே இராமானுஜர் தம் குற்றங்களையும் தாழ்மையையும் நினைத்து வருந்தியவராக, முதலில்

---

*ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மி இதி
யாசதே |
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத்
வ்ரதம் மம ||

அருள்வடிவாகிய பிராட்டியின் ஆசி வேண்டிப் பரமனிடம் சரண் புகுந்தார். அப்போது அரங்கன் இராமானுஜரை நோக்கி, ''எத்தனை தடவை நான் உனக்கு அபயம் அளித்ததை நினைவுபடுத்த வேண்டும்? சரி, பெரும்பாரம் தாங்கி நலிவுற்று இன்று நீ என்னை அடைந்துள்ளாய். உன் சுமையை முற்றிலும் நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன். உனக்குக் குறை ஒன்றும் இல்லை. வெய்யிலில் வாடிக் களைத்த நீ, இனிமேல் என் திருவடிநிழலில் தங்குவாய். சுகமாய் நாளும் இங்கேயே இருக்கலாம்'' என்று உரைத்தான்.

அதுவரையிலும் இராமானுஜரின் உள்ளத்தில், 'திருக்கச்சி நம்பியோடு நேரில் உரையாடும் அருளாளன், என்னுடன் ஒரே ஒரு தடவைகூட நேரில் பேசவில்லையே!' என்ற ஒரு குறை இருந்திருக்கலாம். ஆ! அந்தக் குறை இனி இல்லை; ஐயன் இப்போது நேரில் பேசிவிட்டானே!—இதுதான் இராமானுஜரின் செஞ்சொல் தொகுப்பான **'சரணாகதி கத்யம்'** காட்டும் உள்ளுறைக் காட்சி.

உண்மையில், உலகில் எங்கும், எக்காலத்தும் அருள்நெறிச் சான்றோர்கள் காட்டியதும், இன்றும் காட்டுவதுமான உய்யும் வழி சரணாகதிதானே!

ஸ்ரீவேதாந்ததேசிகன் என்னும் வைணவப் பெரியார் சரணாகதி நெறியைப் பல வகைகளிலும் விளக்கியுள்ளார். அவர் இயற்றிய 'அடைக்கலப்பத்து' என்னும் தமிழ்நூல் சிறியதாயினும் சிறந்தது. அந்நூலில் சரணாகதிக்கு உரிய ஐந்து உறுப்புகள் தெளிவுபடுத்தப்படுகின்றன: 1. எம்பெருமானின் திருவுள்ளப்படி நடக்க உறுதி கொள்ளல் (ஆநுகூல்ய ஸங்கல்பம்), 2. இறைவன் விரும்பாதவற்றை விட்டு விடுதல் (ப்ராதிகூல்ய வர்ஜநம்), 3. அவன் காப்பான் என்னும் அசையாத நம்பிக்கை (மகா விசுவாஸம்), 4. அவனைக் காக்கும்படி வேண்டுதல் (கோப்த்ருத்வவரணம்), 5. தனது தகுதியின்மையை உணர்ந்து அவனே சரண் எனல் (கார்ப்பண்யம்).

நாம் ஆணவத்தை ஆண்டவனிடம் 'அவி' போல் சமர்ப்பித்துவிட்டால், அவன் அதனை ஏற்க ஓடோடி வருவான்! சுருங்கச் சொல்லின், இதுவரை செய்த தவறுகளுக்கு உண்மையாகவே வருந்தி, 'பரமன் எந்தப் பாவத்திலிருந்தும் நம்மைக் காப்பான்; அவனது அருளை விஞ்சியது ஒன்றுமில்லை' என்னும் உறுதியை நாம் மேலும் மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.



அறிவு எப்போதும் பக்திக்குப் பின்னரே செல்ல வேண்டும். அதை முந்தவும் கூடாது; அழிக்கவும் கூடாது.

—தாமஸ் கெம்பிஸ்

வாரக் கணக்காக உணவில்லாமல் என்னால் இருக்க முடியும். சிறிது நேரம் தண்ணீரும் இல்லாமல் இருந்துவிடுவேன். ஆனால் பிரார்த்தனை செய்யாமலோ, ராமநாமத்தைக் கூறாமலோ ஒரு நிமிஷங்கூட என்னால் வாழ முடியாது.

—காந்தியடிகள்

நன்றி மறப்பது நன்றன்று

சரஸ்வதி

> பறவை இனத்தைச் சேர்ந்த ராஜதர்மன், உயர்ந்த உள்ளம் கொண்டது. அரக்கனும் தன் கடமையைச் செய்தான். ஆனல், அந்தணர் குலத்தைச் சேர்ந்த கௌதமன் நன்மை செய்தவருக்கும் தீங்கு செய்ய முற்பட்டான்.

முன்பு ஒரு காலத்தில் கௌதமன் என்ற ஓர் அந்தணன் இருந்தான். பெயரளவில்தான் அவன் அந்தணனே தவிர, அவனுடைய நடையுடை பாவனைகள் யாவும் மிலேச்சர்களைப் போலவே இருந்து வந்தன. அவனைப் பெற்ற தகப்பனர் பெரிய பண்டிதர். ஆனல் கௌதமனது மனமோ படிப்பில் செல்லவில்லை. மனம் போனபடி அலைந்து திரிந்து வந்தான். முதலில் பிட்சை வாங்கிப் புசித்துப் பசியைப் போக்கி வந்தான். ஒரு நாள் அவன் மிலேச்சர் மட்டும் வாழும் நகரத்திற்குச் சென்ருன். அங்கு ஒரு விதவையின் மேல் ஆசைகொண்டு, அவளையே மணந்துகொண்டு சுகமாக அங்கேயே வசிக்கத் தொடங்கினன். இப்போது அவனுடைய தொழில் பறவைகளையும் மிருகங்களையும் வேட்டையாடிப் பிழைப்பதுதான்.

ஒரு நாள் ஒரு சிறந்த பண்டிதராகிய அந்தணர் கௌதமனைக் கண்டார். அவருக்கு, அந்தணர் குலத்தில் பிறந்தும் வேட்டையாடும் இழிதொழிலைச் செய்துவந்த கௌதமன் மீது இரக்கம் உண்டாயிற்று. அவர் கௌதமனை அருகில் அழைத்து, ''வாயில்லாப் பிராணிகளை இம்சிக்கும் பாவச்செயலை விட்டுவிடு'' என்று புத்திமதி கூறினர். கௌதமன் அதற்கு இசைந்தான். பணம் சம்பாதிப்பதற்காக வேறு வழியைத் தேடிப் புறப்பட்டான். தற்செயலாக வியாபார நிமித்தமாகச் செல்லும் வியாபாரிகளின் கூட்டத்தைப் பார்த்தான். அவர்களுடன் தானும் சேர்ந்துகொண்டான். காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்த அவர்கள் மீது மதம் கொண்ட யானைகள் பாய்ந்து வந்தன. அனைவரும் தலைதெறிக்க ஓடினர்கள். எவ்வளவு வியாபாரிகள் கொல்லப்பட்டார்கள் என்பது யாருக்குமே தெரியாது. கௌதமனும் தப்பி ஓடி, ஓர் அடர்ந்த காட்டில் சுற்றித் திரிந்து வந்தான்.

கௌதமனுக்கு அதுவே ஒரு நல்ல காலமாக அமைந்தது. ஏனென்ருல் அந்தக் காடு பல வகைகளிலும் சிறந்து விளங்கியது. பல வகையான பழங்கள் பழுத்துத் தொங்கும் மரங்களும், மணமுள்ள மலர்களும், இன்னிசையுடன் பாடும் பறவையினங்களும் கௌதமனை மிகவும் கவர்ந்தன. திருப்தியாகப் பழங்களைத் தின்றுவிட்டு இளைப்பாறுவதற்காக ஒரு மர நிழலை அடைந்தான். அது ஓர் ஆலமரம். அந்தக் காட்டில்தான் காச்யபரிஷியின் மகனும் ராஜதர்மன் என்ற பெயரையுடையதுமாகிய கொக்கு வசித்து வந்தது. அது வழக்கமாக இளைப்பாறும் மரம்தான் கௌதமன் இளைப்பாற வந்த இடம். இதுவும் அவனுடைய நல்வினைப் பயனே.

மாலை வந்தது. பல வண்ணங்களுடன் கண்களைப் பறிக்கும் அழகுடைய இறக்கைகளுடன் கூடிய ராஜதர்மன் தனது இருப்பிடத்திற்கு வந்தது. பிரம்மலோகம் சென்று திரும்பிய அது தன் வீட்டிற்கு யாரோ விருந்தினன் வந்திருப்பதைக் கண்டது. மிக்க மகிழ்ச்சியுடன் மனிதர்கள் பேசும் பாஷையிலேயே அவனை வரவேற்றது. வணக்கம் கூறியது. தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டது.

பிறகு விருந்தினன் படுத்துக்கொள்வதற்காக இளந்தளிர்களையும், நறுமணமுள்ள மலர்களையும் கொண்டுவந்து மிருதுவான படுக்கையைத் தயாரித்தது. அவன் மகிழும் முறையில் நன்கு உபசாரம் செய்து, சாப்பாடு போட்டது.

கௌதமன் வயிருர உண்டு மனம் மகிழ்ந்தான். தனக்காகத் தயாரிக்கப்பட்ட மலர்ப் படுக்கையில் படுத்துக்கொண்டான். அவன் படுத்துக்கொண்டதும் ராஜதர்மன் தன் சிறகுகளை விரித்து விசிறத் தொடங்கியது. கௌதமன் நன்ருக உறங்கினன்.

ராஜதர்மன் கௌதமனின் வறுமை நிலையைப் புரிந்துகொண்டது. பணம் தேடிப் புறப்

பட்ட அவனைத் தன் நண்பனாகிய விருபாக்ஷன் என்ற அரக்கனின் இருப்பிடத்திற்குப் போகச் சொல்லி ஆலோசனை கூறியது. விருபாக்ஷனின் இருப்பிடம் அந்த இடத்திலிருந்து மூன்று யோஜனை தூரத்தில் இருந்தது.

மறுநாள் அதிகாலையிலேயே கௌதமன் விருபாக்ஷனின் இருப்பிடத்தை நோக்கிப் புறப் பட்டான். விருபாக்ஷன், கௌதமன் தன் நண்ப னாகிய ராஜதர்மனால் அனுப்பப்பட்டவன் என் பதை அறிந்து, மிக்க மகிழ்ச்சியுடன் அவனை உபசாரங்களுடன் வரவேற்றான். நல்ல விருந்து வைத்தான். அதன் பிறகு கௌதமனின் தேவையை அறிந்து, அவன் விரும்பியதைவிட அதிகமாகவே பணத்தைக் கொடுத்தான்.



அரக்கர்களின் அரசனான விருபாக்ஷன் அளித்த பணமூட்டையுடன் கௌதமன் திரும்பி வரும் வழியில், மறுபடியும் ராஜதர்ம னின் இருப்பிடத்திற்கே வந்தான். இந்த முறை யும் முன்புபோலவே ராஜதர்மன் அவனை வர வேற்று உபசரித்து நல்ல விருந்து வைத்தது. கௌதமனும் தானும் உறங்கிவிட்டால் காட்டு மிருகங்கள் எவையேனும் வந்து கௌதமனைக் கொன்றுவிட்டால் என்ன செய்வது என்று பயந்தது. ஆகையால், கௌதமன் உறங்கி யதும் அங்கே சிறிது தொலைவில் தீ மூட்டி வைத்தது. கௌதமன் உறங்கிய பிறகு ராஜ தர்மன் தரையிலேயே படுத்துக்கொண்டு நன்றாகத் தூங்கிவிட்டது.

நள்ளிரவில் திடீரென்று தூக்கம் கலைந்து எழுந்தான் கௌதமன். அவனுடைய சிந்தனை பழையபடி கெட்ட வழியில் சென்றது. அவன், 'நம் வீடோ மிகவும் தொலைவில் இருக்கிறது. பேராசைப்பட்டுக்கொண்டு அதிகமான பணத் தையும் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். வழியில் சாப்பிடுவதற்கு ஏதேனும் கிடைக் குமோ கிடைக்காதோ, தெரியவில்லை. என்னி டமும் உண்பதற்கு எதுவும் இல்லை. இந்தக் கொழுத்த கொக்கைக் கொன்று எடுத்துச் செல்வது எதற்கும் சிறந்தது' என்று நினைத் தான். உடனே ராஜதர்மனைக் கொன்றான். அதன் இறக்கைகளைப் பிய்த்து எறிந்தான். அதன் உடலை அந்தத் தீயில் வாட்டி உடன் எடுத்துக்கொண்டு ஊரை நோக்கிப் புறப்பட் டான், அந்தக் கிராதகக் கௌதமன்.

ராஜதர்மன் இரண்டு இரவுகளாக வராத காரணத்தால் விருபாக்ஷன் கலக்கம் அடைந்து, தன் மகனிடம், ''குழந்தாய்! என் ஆருயிர் நண்பன் ராஜதர்மன் தினமும் பிரம்மலோகத் திற்குச் சென்று பிரம்மாவை வணங்குவது வழக்கம். திரும்பும் வழியில் நம் வீட்டிற்கு வந்து என்னைப் பார்க்காமல் திரும்பிச் செல்ல மாட்டான். இதுவரை அப்படி இருந்த அந்த ராஜதர்மனை இரண்டு நாளாகக் காணவில்லை. காரணம் என்னவோ தெரியவில்லை. என் மனம் மிகவும் சங்கடப்படுகிறது. அவன் அனுப்பிய அந்தக் கௌதமன் நல்லவனாக இருப்பான் என்று எனக்குப் படவில்லை. நீ சென்று ராஜ தர்மனைப் பற்றி அறிந்து வா'' என்று தெரி வித்தான்.

அரக்கனின் மகன் தன் மற்ற அரக்கத் தோழர்களுடன் சென்று, ராஜதர்மனின் இருப் பிடம் அடைந்தான். அங்கே இறந்து கிடந்த ராஜதர்மனின் சிறகுகளைக் கொண்டு, நடந் ததை ஊகித்தான். உடனே கௌதமனைத் தேடிப் புறப்பட்டான். சிறிது நேரத்திலேயே கௌதமன் பிடிபட்டுவிட்டான். அவனை அப்படியே தூக்கிச் சென்று, அரக்கனின் மகன் தந்தையின் முன்பு நிறுத்தினான்.

நண்பனின் வெந்த உடலைக் கண்ட விருபா க்ஷன் உடனே மயக்கமடைந்தான். சுற்றத்தார் களும் நண்பர்களும் மிகவும் கலங்கினர். கதறிக் கதறி அழுதனர். மூர்ச்சை தெளிந்ததும் அரக்க அரசன் கூறினான்: ''அரக்கர்களே! இந்த அந் தணனைக் கொன்று இவன் மாமிசத்தைச் சாப் பிடுங்கள்.''

அதைக் கேட்ட அரக்கர்கள் இரண்டு கைகளை யும் கூப்பி, ''அரசே! இந்தப் பாவியின் உடலை நாங்கள் உண்ணமாட்டோம். இந்த நன்றி கெட்டவனின் மாமிசத்தை உண்ப தால் நாங்களும் பாவிகள் ஆகிவிடுவோம். எனவே இவனைச் சண்டாளர்களிடம் கொடுத்து விடுங்கள்'' என்று வேண்டிக்கொண்டார்கள்.

விருபாக்ஷன் சண்டாளர்களிடம் கௌதமன் உடலை வெட்டி அளிக்க முற்பட்டபோது அவர் களும், ''அரசே! இந்த நன்றிகெட்டவனின் மாமிசம் எங்களுக்கும் வேண்டாம். அதை எந்தப் பறவையோ மிருகமோ அன்றிப் புழு வோகூட விரும்பாது. எனவே எங்களுக்குத் தேவையில்லை'' என்று முறையிட்டனர்.

ஆகவே கடைசியில் கௌதமனின் உடல் ஒரு பெரிய ஆழமான குழியில் தூக்கி எறியப் பட்டது.

அரக்க அரசன் ராஜதர்மனின் உடலை நறு மணம் மிக்க சந்தனச் சிதையில் வைத்துத் தக்க மரியாதையுடன் தீ மூட்ட எழுந்தான். ஆனால் அதற்குள் தேவேந்திரன் காமதேனு வுடன் அங்கே வந்து சேர்ந்தான். உடனே காம தேனுவின் வாயிலிருந்து அமிர்தமயமான நுரை வந்து சிதையில் விழுந்தது. அந்த நுரை ராஜதர்மனின் உடலில் பட்டதும், உடனே ஒரு விந்தை நிகழ்ந்தது. ராஜதர்மனின் சிறகு முன்பைவிடப் பொலிவுடன் முளைத்தது. ராஜதர்மன் உயிர்பெற்று எழுந்தான். உடனே நடந்தவை அனைத்தையும் அறிந்தான். அவன் தேவேந்திரனிடம், ''கௌதமனையும் உயிர் பெறச் செய்யவேண்டும்'' என்று வேண்டினான். தேவேந்திரன் ராஜதர்மனின் சிறந்த பண்பைப் பாராட்டிக் கௌதமனையும் பிழைப்பித்தான்.

சாதுக்கள் எனப்படுபவர் தமக்குத் தீங்கு இழைப்பவர்களுக்கும் நன்மையே செய்வார்கள். நன்றிகெட்ட பாவியும் கூடத் திருந்தி நலம் பெற அருள் செய்வார்கள்.

—மகாபாரதம், சாந்திபர்வம் [168-173]

அனாதைச் சிறார்களுக்குப் புகலிடம்

ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் உணவு, உடை, இருப்பிடம், வைத்தியம், படிப்பு (ஹைஸ்கூல் வரை) வாழ்க்கை முறைப் பயிற்சி ஆகியன யாவும் முற்றும் இலவசமாய் வழங்கி அனாதைச் சிறுவர்கள் பரிபாலிக்கப்பெற்று வருகிறார்கள் என்பதைத் தமிழ்நாடு அறியும்.

ஆகையால், அனாதைச் சிறார்களின் வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் தாயும் தந்தையும் இருவருமேயல்லாத திக்கற்ற ஏழை அனாதைச் சிறுவர்களைப் பற்றி மட்டும் இங்குக் கடிதம் எழுதினால் அதற்கான அரசு விதிப்படியுள்ள அச்சுப் பாரங்கள் அனுப்பி வைக்கப்படும். ஜூன் மாதம் முதல் தேதி பள்ளி திறக்கப்படுவதால், சம்பந்தப்பட்டவர்கள் இப்போதிருந்தே மனுக்கள் அனுப்பி வைத்தால்தான் பரிசீலனை செய்து முடிவுக்கு வரக் காலம் சரியாக இருக்கும். முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை சிறுவர்கள் மட்டுமே சேருவதற்கு மனு செய்யலாம். தாய் தந்தையர் யாரொருவர் இருந்தாலும், சிறுமிகளாயிருந்தாலும் மனு செய்யாதீர்கள். கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விதிகள் பாரம் அனுப்பி வைக்கப்படும்.

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை—639 115
திருச்சி மாவட்டம்.

நமது தாய்நாடு

சுவாமி விவேகானந்தர்



1

ஒவ்வொரு நாட்டிலும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. வலிமை படைத்த ஒரு சிலர் கட்டளை இடுகிறார்கள். அவற்றை எல்லாம் எஞ்சியுள்ள மக்கள் அனைவரும் செம்மறி ஆடுகளைப் போல, முடிந்த முடிவுகளாக ஏற்றுப் பின்பற்றி நடப்பார்கள். அவ்வளவுதான் விஷயம். உங்களுடைய பாராளுமன்றம், சட்டசபை, வாக்களிப்பு முறை, உங்கள் பெரும்பான்மை மக்களுடைய இரகசிய வாக்களிப்பு முறை-ஆகிய இவை அனைத்தையும் நான் பார்த்திருக்கிறேன். எனது நண்பரே, இவை எல்லாம் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாகத்தான் நடைபெறுகின்றன ...... இப்போது இங்கு இருக்கிற கேள்வி இதுதான்: இத்தகைய வலிமையைப் பெற்றவர்கள் இந்தியாவிலே யார் இருக்கிறார்கள்? ஆன்மிகத் துறையில் மிகப் பெரும் வலிமை படைத்த சமயச் சான்றோர்களிடையே அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தாம் நமது சமுதாயத்தை முன்னின்று வழி நடத்துகின்றனர். தேவைப்படும்போது மீண்டும் அவர்களே சமூகத்தின் விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் மாற்றியமைக்கிறார்கள். அவர்கள் சொல்வதை நாம் அமைதியுடன் கேட்கிறோம். அவர்களின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்கவும் செய்கிறோம்.

2

முதலில் இதை நீ புரிந்துகொள்ள முயற்சி செய். மனிதன் சட்டங்களை உருவாக்குகிறானா அல்லது சட்டங்கள் மனிதனை உருவாக்குகின்றனவா? மனிதன் பணத்தைச் சம்பாதிக்கிறானா அல்லது பணம் மனிதனைப் படைக்கிறதா? பெயரையும் புகழையும் மனிதன் தேடிக்கொள்கிறானா அல்லது பேரும் புகழும் மனிதனை உருவாக்குகின்றனவா? எனது நண்பனே, முதலில் மனிதனாக இரு. அதன்பிறகு இவை எல்லாம் தாமாகவே உன்னைத் தொடர்ந்து வருவதைக் காண்பாய். வெறுக்கத்தக்க பொறாமையையும், நாய்களைப் போல ஒருவரை ஒருவர் பார்த்துப் பொறாமையுடன் குரைத்துக் கொண்டிருப்பதையும் விட்டொழித்துவிடு. ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்கு. நீ மனிதனாகப் பிறந்திருக்கிறாய். நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன் பின்னால் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச் செல்.

3

உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நீ நேர்மை உள்ளவனாக இருக்கிறாயா? இறந்தே போனாலும் சுயநலம் இல்லாதவனாக இருக்கிறாயா? அன்பு செலுத்துபவனாக இருக்கிறாயா? அப்படியானால் மரணத்துக்கும் நீ அஞ்ச வேண்டியதில்லை.

எனது அருமைக் குழந்தைகளே! முன்னேறிச் செல்லுங்கள். பரந்த இந்த உலகம் ஒளியை வேண்டுகிறது. அதை எதிர்பார்க்கிறது. இந்தியா மட்டுமே அத்தகைய ஒளியைப் பெற்றிருக்கிறது. ஜாலவித்தையிலே இந்தியா அந்த விளக்கைப் பெற்றிருக்கவில்லை. போலித்தன்மையிலும் அந்த விளக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் உண்மையான மதத்தின் தலைசிறந்த சமயபோதனையாகவும் மிகவும் உயர்ந்த ஆன்மிக உண்மையாகவும் அந்த விளக்கை இந்தியா பெற்றிருக்கிறது. ஆகையால்தான் பலவிதமான இன்ப துன்பங்களில் இருந்தும் இன்று வரையிலும் கடவுள் இந்தியாவைப் பாதுகாத்து வைத்திருக்கிறார். இப்போது அதற்கு உரிய சரியான நேரம் வந்துவிட்டது.

எனது வீரக் குழந்தைகளே, நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க்குட்டிகளின் குரைப்பைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. ஆகாயத்தின் இடியோசைகளைக் கேட்டும் நீங்கள் அஞ்ச வேண்டாம். எழுந்து நின்று வேலை செய்யுங்கள்.

4

மிருகபலத்தால் அல்லாமல், ஆன்மிக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது. அழிவுமுறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக, அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்... ... ... புராதன பாரத அன்னை மீண்டும் ஒரு முறை விழிப்படைந்துவிட்டாள். தனது அரியணை

யிலே அவள் அமர்ந்திருக்கிறாள். புத்திளமை பெற்று, என்றுமே இல்லாத பெரும் மகிமை களோடும் அவள் திகழ்கிறாள்—இந்தக் காட்சி யைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போலத் தெளிவாக நான் பார்க்கிறேன். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையை உலகம் முழுவதிலும் பிரகடனப் படுத்துங்கள்.

5

கையில் கலப்பை பிடித்த உழவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழும்பட் டும்! மீனவர்கள், சக்கிலியர்கள், தோட்டிகள் ஆகியவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழட்டும்! பலசரக்குக் கடைகள், பலகாரக் கடைகளிலிருந்தும் அவள் தோன் றட்டும்! தொழிற்சாலைகள், கடைவீதிகள், சந்தைகள் ஆகியவற்றிலிருந்தெல்லாம் புதிய இந்தியா எழுந்து வெளிவரட்டும்!

6

இந்தியர்களாகிய நம்மிடம் மிகப் பெரிய ஒரு குறைபாடு இருக்கிறது. அது காரணமாக நாம் மிகவும் துன்பப்படுகிறோம். அதாவது, நிரந்தரமான ஒரு ஸ்தாபனத்தை நாம் உரு வாக்க இயலாதவர்களாக இருக்கிறோம். அதற் குக் காரணம், நம்முடைய அதிகாரத்தைப் பிறருடன் நாம் பங்கிட்டுக்கொள்ள ஒரு போதும் விரும்புவதில்லை. நாம் இறந்துபோன பிறகு என்ன நடக்கும் என்பதைப் பற்றியும் நாம் ஒருபோதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

7

ஜெனரல் ஸ்ட்ராங் (Strong) என்னும் எனது ஆங்கிலேய நண்பர் ஒருவர், சிப்பாய்க் கலகத்தின்போது இந்தியாவில் இருந்தார். அவர் சிப்பாய்க் கலகம் பற்றிய பல கதைகளை எனக்குக் கூறுவது வழக்கம்.

ஒரு நாள், நான் அவருடன் பேசிக்கொண் டிருந்தபோது இடையில் அவரைக் கேட்டேன்: "சிப்பாய்கள் போதுமான அளவுக்குத் தேர்ச்சி பெற்ற வீரர்களாக இருந்திருக்கிறார்கள். மேலும் அதோடு அவர்களிடம் தேவையான அளவு துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் உணவுப் பொருள்களும் இருந்திருக்கின்றன. அப்படி இருந்தும் அவர்கள் ஏன் படுதோல் வியை அடைந்தார்கள்?"

அதற்கு அவர், "சிப்பாய்க் கலகத்தின் படைத்தலைவர்கள், போரில் தாங்கள் முன்னணி யில் ஈடுபடுவதற்குப் பதிலாக, படைக்குப் பின்னால் பாதுகாப்பான ஒரு பகுதியில் இருந்து கொண்டு, 'வீரர்களே, சண்டை போடுங்கள்!' என்று கத்திக்கொண்டிருந்தார்கள். தலைமை ஏற்பவர்கள், தாங்கள் முதலில் மரணத்தை எதிர்நோக்க முன்வந்தாலன்றி, எஞ்சிய படை வீரர்கள் முழுமனதுடன் போரில் ஈடுபட முன் வர மாட்டார்கள்" என்று பதில் சொன்னார்.

ஒரு தலைவன் என்பவன் தன்னுடைய தலை யைப் பலி கொடுக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். ஓர் இலட்சியத்துக்காக நீ உன் உயிரையும் அர்ப்பணிக்கக்கூடியவனாக இருந் தால்தான், நீ ஒரு தலைவனாக இருக்க முடியும். ஆனால் நாம் அனைவரும் தேவையான தியாகம் எதையும் செய்யாமலேயே தலைவர்களாகிவிட விரும்புகிறோம். அதன் விளைவு வெறும் பூஜ்ய மாக முடிந்து போய்விடுகிறது. நாம் சொல் வதை ஒருவரும் கேட்பதில்லை.

8

முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். மேலைநாட்டு மக்களிடையே சுதந்திர மனப் பான்மை மிகவும் அதிகம். என்றாலும் அவர் களிடம், கீழ்ப்படியும் தன்மையும் அதற்கு நிக ராகவே இருக்கிறது. ஆனால் இங்கு நாமோ, கர்வம் கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த உணர்ச்சி எப்போதும் எந்தக் காரியத்தையும் சாதிப்பதில்லை. பெருமளவில் துணிவு, எல்லை யற்ற வீரம், அளவுகடந்த ஆற்றல், அதோடு இவை அனைத்திற்கும் மேலாக முழு அளவி லான கீழ்ப்படியும் தன்மை—ஆகிய இந்தக் குணங்கள்தாம் தனி மனிதனின் முன்னேற்றத் துக்கும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்கின்றன. இத்தகைய குணங்கள் நம்மிடம் அறவே இல்லாமற் போய்விட்டன.

9

அடிமைகளின் குணமாகிய பொறாமைதான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது. ஆண்டவனே தன் முழு வலிமையைச் செலுத்தியும் இந்தக் காரணத் தால் நமக்கு உதவி ஒன்றுமே செய்ய முடியாமற் போயிற்று. தன் கடமைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு இறந்து போன ஒருவனாக இப் போது என்னை நீ நினைத்துக்கொள். அந்த வேலைகளின் சுமை முழுவதும் உன் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக நினைத்துக் கொள்.

நமது தாய்நாட்டின் இளைஞர்களே! இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காகவே விதியால் நீங்கள் நியமிக்கப்பட்டவர்கள் என்று உங்களை நீங்கள் கருதுங்கள். இத்தகைய ஆக்கபூர்வ மான பணிகளில் தாய்நாட்டின் முன்னேற்றத் திற்காக முழுமனதுடன் ஈடுபடுங்கள்.



ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர்
தமிழாக்கம்: ரா. கணபதி

ஆகஸ்ட் 28

சுவாமி துரியானந்தர்: ''தியானிப்பவன், தியானத்தின் லட்சியம், தியானம் என்னும் செயல் ஆகியவை ஐக்கியமாகும்போதே, அதாவது இவை வெவ்வேறானவை என்ற எண்ணம் இல்லாமல் போகும்போதே (உண்மையான) தியானம் தொடங்குகிறது. (மாலையை உருட்டிச் செய்யும்) ஜபமானது தானாக இயங்கத் தொடங்கும்போது, அதாவது (சாதகனது) மனதின் ஒரு பகுதி எப்போதுமே நாமத்தை ஜபிக்கும்போது,' ஒருவன் ஜப யோகத்தில் சற்று முன்னேறியிருக்கிறான் என்று சொல்லலாம். எந்த வழியாயினும் 'நான்' என்பது மறக்கப்பட வேண்டும்.

''ஒரு காலத்தில் நான் என்னுடைய ஒவ்வொரு காலடி வைப்பும்கூடக் கடவுளுடைய சக்தியாலேயே நிகழ்கிறது என்றும், நான் ஏதுமே இல்லை என்றும் உணர்ந்து வந்தேன். தெளிவாகவே உணர்ந்து வந்தேன். இந்த உணர்ச்சி சில தினங்களுக்கு நீடித்தது.

''ஒருபோதிலும் எவரிடமிருந்தும் எதையும் எதிர்பாராதே. மாறாக நீ எப்போதும் கொடுத்துக்கொண்டே இரு. இல்லாவிட்டால் ஒருவித வறட்சி உணர்ச்சிக்கு ஆளாகிவிடுவாய். தாங்கள் துறவியராகிவிட்டதனால் மற்றவருக்கு ஏதும் செய்ய வேண்டியதில்லை எனக் கருதி வறட்சியாகிவிட்ட பல சன்னியாசிகளை நான் கண்டிருக்கிறேன். (பிறருக்கு நீ கொடுப்பவனாக இருந்தாலும்) உன் மனதை மட்டும் எவருக்கும் கொடுத்துவிடக் கூடாது. அதை நீ ஆண்டவன் ஒருவனுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் நீ திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பது. 'ஹே பிரபோ! என் பூரண இதயத்தால் நான் உன்னையே நேசிப்பேனாக' என்று அவனிடம் கதறி வேண்டுக! நாம் கையினால் வேலை செய்ய வேண்டும்; ஆனால் மனதை எப்போதும் அவனிடமே வைத்திருக்க வேண்டும் என்று குருமகராஜ் போதிப்பார்.

''இறைவன் பாரபட்சம் உள்ளவனல்ல. மழை எல்லா இடங்களிலும் ஒன்று போலவே விழுவது போல, அவனது கிருபை நல்லோர் தீயோர் அனைவர் மீதும் பொழிகிறது. எவன் நிலத்தை உழுதாலும் அவன் அறுவடை செய்து கொள்கிறான். தான் இறைவனின் விசேஷ அன்பைப் பெற்றவன் என்று எவனாவது கூறினால் அது அவனுடைய எண்ணமும் மனப்போக்கும் தான். தனது சொந்த வாழ்வின் அனுபவத்தைப் பார்த்து இப்படிச் சொல்கிறான். ஆனால் அது உண்மையல்ல.

''கடவுள் சிலரைப் பந்தத்தில் வைத்துள்ளார்; வேறு சிலரை விடுவிக்கிறார் என்றும் இன்னொரு கருத்து உள்ளது. ஆனால் இப்படிப்பட்ட போக்கை எவன் கைக்கொள்ள முடியும்? எவனொருவன் அனைத்தையும் ஒன்றென உணர்ந்து, மகத்தான துயரத்திலும் இறைவனின் கருணையை அனுபவிக்கிறானோ, அவன் மட்டுமே இந்தப் போக்கைக் கைக்கொள்ள முடியும்.

''மூன்றாவதாக இன்னோர் அபிப்பிராயமும் உண்டு. அதாவது: 'நல்லதாக எது இருப்பினும் அது இறைவனைச் சேர்ந்தது, தீயதாக எது இருந்தாலும் அது நம் கர்ம வினையே.' இந்த அபிப்பிராயத்தை நாம் வளர்த்துக் கொண்டால் அதன் உபாங்கமாக அகங்காரத்திலிருந்து விடுபடத் தொடங்குவோம்.''

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600004

1978 மே மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீ சங்கர — இராமானுஜ ஜயந்தி:

12-5-78 வெள்ளி:	*ஜயந்தி பூஜை*
ஸ்ரீ சங்கர ஜயந்தி	
14-5-78 ஞாயிறு:	**பொதுக் கூட்டம்**
மாலை 4-30 முதல் 7 வரை	*ஸ்ரீராமகிருஷ்ண மடம், சங்கம் ஆகியவற்றின் பொதுத் தலைவர்* **ஸ்ரீமத் சுவாமி விரேச்வரானந்தஜி மகராஜ்** *அவர்கள்* **'சங்கர திக் விஜயம்'** *என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டு விழாவிற்குத் தலைமை வகிப்பார்கள்.*
	பேசுபவர்: 1. டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம்
	2. திரு 'அண்ணா' சுப்ரமண்யம்
ஸ்ரீராமானுஜ ஜயந்தி	
21-5-78 ஞாயிறு:	**பொதுக் கூட்டம்**
மாலை 5-30 முதல் 7 வரை	*தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர்*
	பேசுபவர்: M. R. சம்பத்குமார்
ஸ்ரீபுத்த ஜயந்தி	
22-5-78 திங்கள்:	*புத்த பௌர்ணிமா*
28-5-78 ஞாயிறு:	**பொதுக் கூட்டம்**
மாலை 5-30 முதல் 7 வரை	*தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர்*
	பேசுபவர்: பேராசிரியர் G. N. சேஷாத்திரி
சத் சங்கம்: *ஞாயிறுதோறும்*	*மாலை 4 மணி முதல் 8 மணி வரை*
மாலை 4 முதல் 4-20 வரை	*ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (7-5-78)*
மாலை 4-20 முதல் 4-30 வரை	*தியானம்*
மாலை 4-30 முதல் 5-30 வரை	*சொற்பொழிவு (தமிழ்)*
	1. **ஸ்ரீமத் பாகவதம்**—*திரு 'அண்ணா' சுப்ரமண்யம் (7-5-78)*
மாலை 5-35 முதல் 6-30 வரை	*சொற்பொழிவு (ஆங்கிலம்)*
	1. **ஸ்ரீமத் பகவத்கீதை**—*சுவாமி கபீரானந்தர் (7-5-78)*

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—*(மாலை 5-45 மணிக்கு)*

திங்கள்:	**பக்தி யோகம்**—*சுவாமி அமிர்தானந்தர் (ஆங்கிலம்)*
செவ்வாய்:	**ஸ்ரீமத் அத்தியாத்ம ராமாயணம்**—*சுவாமி கபீரானந்தர் (ஆங்கிலம்)*
புதன்:	**மகாபாரதம்**—*திரு 'அண்ணா' சுப்ரமண்யம் (தமிழ்)*
வியாழன்:	**ஸ்ரீமத் பகவத்கீதை**—*சுவாமி கோலோகானந்தர் (ஆங்கிலம்)*
வெள்ளி:	**ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்**—*பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா (தமிழ்)*
வெள்ளி:	**ஸ்ரீமத் பகவத்கீதை** *(மாலை 6-30 மணிக்கு) —சுவாமி கோலோகானந்தர்*
	(ஸ்ரீராமகிருஷ்ண மந்திரம், 18, தெற்கு மாட வீதி, திருவல்லிக்கேணி)

சிறப்புச் சொற்பொழிவுகள்:

சனிக்கிழமைகளில்	*1.* **ஸ்ரீமத் பாகவதம்**—*திரு பி. இராமகிருஷ்ணன் (13-5-78)*
மாலை 5-45 மணிக்கு	*2.* **ஈசாவாஸ்ய உபநிஷதம்**—*சுவாமி கீர்த்திதானந்தர் (6-5-78 & 20-5-78)*
	3. **நாராயணீயம்**—*திரு ஆர். கோதண்டராமன் (27-5-78)*

விசேஷ தினங்கள்:

28-5-78 ஞாயிறு:	*அந்தர் யோகம் (சாதனை தினம்)*
	3-5-78 & 18-5-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு **ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம்** *நடைபெறும்.*

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்

தொலைபேசி: 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி......

சில கருத்துக்கள்

நமது 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற இனிய தமிழ் வெளியீடு கனியமுதம் போல் சித்தத்தில் தித்திக்கின்றது. சமானமில்லாத பரமஞானியின் திருப்பெயரால் வெளிவரும் இப் பத்திரிகையின் அரிய தெய்விகத் தொண்டை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் இந்த மாத வெளியீடு பரம பவித்திரமான கங்கா ஜலம் போல் தூய்மையானது. உள்ளத்தைத் தூய்மை செய்து இறையருளைத் தப்பாமல் நல்கும் இதனைத் தமிழ் மக்கள் அனைவரும் ஒரு பெரும் வரப்பிரசாதமாக ஏற்றுப் படித்து, மிகுந்த பயனைப் பெறுவார்களாக.

அன்பன்

—கிருபானந்தவாரி

சில பத்திரிகைகளைப் படிக்கப் புகுவது பார்க்கில் நுழைவது போன்றது. இன்னும் சில பத்திரிகைகளில் நுழைவது உலாவச் செல்வதை ஒத்தது. வேறு சிலவற்றைப் பார்ப்பது கடை வீதிக்குப் போவதைப் போன்றது.

மிகச் சில பத்திரிகைகளையே கோவிலுக்குள் பயபக்தியோடு நுழைந்து வழிபடுவதைப் போன்ற சிரத்தையுடன் படிக்க முடியும். இப்படிச் சிரத்தையோடு படிக்க முடிந்த இதழ்களில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயமும் ஒன்று. ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து பல்லாண்டுகளாக வெளி வரும் இந்த இதழ் வியாபாரத்துக்காக அந்தரங்க சுத்தியை இழந்துவிடாமல் நடத்தப்படும் பத்திரிகைகளில் ஒன்று. ஆத்மசுத்தி—அந்தரங்க சுத்திக்கான விஷயங்களைக் கொண்டு இது வெளி வருகிறது. மாற்றங்கள், ஏமாற்றங்கள், வர்த்தகத் தகிடுதத்தங்களைச் செய்யாமல் வெளிவரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை எவ்வளவு பாராட்டினாலும் அதில் ஒரு சொல்லும் மிகையாக இராது என்று நான் துணிந்து கூறுவேன்.

—நா. பார்த்தசாரதி

1977 டிசம்பர் இதழ் 'தீபம்'

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சஞ்சிகையை அவ்வப்போது பார்த்து வருகிறேன். ஒவ்வொரு இல்லத்திலும் இச் சஞ்சிகை விளங்கும் நாள் என்று வருமோ!

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அன்னை சாரதாமணி போன்றோரின் அருள்வாக்குகளினால் மட்டுமல்லாமல், அவர்களது அருள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிவதனாலும் நமது மக்கள் பெரும் பயன் எய்துவர். இப்போது போலவே, தொடர்ந்து அத்தகு தெய்வத் தன்மை வாய்ந்த, நமது மண்ணில் வாழ்ந்திருந்த அப் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுபடக் கதைகளாக இந்தச் சஞ்சிகை வெளியிடுமானால் அற்புதமான நற்பயன்களை நமது மக்கள் பெறுவர். எல்லாவற்றுக்கும் காலமும் குருவின் அருளும் பாலிக்குமாக.

—ஜெயகாந்தன்

ஆசிரியர்: சுவாமி சித்கனானந்தர்; துணை ஆசிரியர்: பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா
பதிப்பாளர்: சுவாமி சித்கனானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004.
அச்சிடுபவர்: S. ராமஸ்வாமி, ராஜ்ஸ்ரீ பிரிண்டர்ஸ், 97 ஔவை ஷண்முகம் சாலை,
சென்னை 600086

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

- ★ உண்மையைத் தவிர வேறு அழகு கிடையாது.
- ★ தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.
- ★ கெட்ட உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய நாடகங்களையும், சினிமாக்களையும், முழு அளவில் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும்.
- ★ சுயமாகத் தியாகம் செய்யும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த சொரூபமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.
- ★ மனதை அலட்டிக் கொள்வதைப் போல, உடலைக் கரைப்பது வேறு எதுவும் இல்லை. கடவுளிடம் ஒருவனுக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால், அவன் எதை நினைத்தும் மனதை அலட்டிக் கொள்வதற்கு வெட்கப்படுவான்.

ஆண்டுச் சந்தா: இந்தியா—ரூ. 7.00 இலங்கை—ரூ. 18 யு.எஸ்.ஏ.—$ 3.00
பிறநாடுகள்—£ 1.70 ஆயுள் சந்தா: இந்தியா—ரூ. 100 யு.எஸ்.ஏ.—$ 50.00
பிறநாடுகள்—£ 20.00 தனிப்பிரதி வெளிநாடு: ரூ.—2 00

தனிப் பிரதி 70 காசு